உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௯.] சித்திரபானு-ஞு ஆவணி மீ [பகுதி-௧௦.

Vol. 39. August—September 1942. No. 10.

உள்ளுறை.

மதுரை இயற்றமிழ்மகாநாட்டுத் தலைவர்பேருரை:—	ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தர்	௪௬௫-௪௮௦
பொய்யும் மெய்யும்:—	நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர்	௪௮௧—௪௮௭
மதிப்புரை:—		௪௮௮
இராமசேயம்:— (உத்தரகாதை)	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	௪௮௯—௫௦௦
கிருஷ்ணன் மீனன்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	௫௦௧—௫௦௮
குருகைமான்மியக் குறிப்புரை:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	679—682

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1942.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி–௩௯.] சித்திரபானு-ஷு ஆவணி மீ [பகுதி–௧௦.
Vol. 39. August–September 1942. No. 10.

மதுரை இயற்றமிழ்மகாநாட்டுத் தலைவர்பேருரை

[இது, இம்மதுரை மாநகரில் நிகழும் சித்திரபாநு யாண்டு ஆடித்திங்கள் ௧௭, ௧௮, ௧௯ (1942-ஆம்ஷு ஆகஸ்டுமீ 1, 2, 3)-ஆம் நாட்களிலேகூடிய முத்தமிழ்மகாநாட்டு இயற்றமிழ்ப்பகுதிக்குத்தலைவராகிய சுவாமி விபுலாநந்தரவர்கள் வகுத்துரைத்தது.]

"தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே!"

மாட்சிமைதங்கிய சேதுபதிமன்னரவர்களே! முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமப்புலவர்களே! தமிழணங்கின் செல்வப் புதல்வர்களே! புதல்வியர்களே!

வையைப் பேரியாறு வளஞ்சுரந்தூட்டப்-பொய்யாவானம் புதுப்பெயல்பொழியத் தென்னர்குலத்தோர் செவ்விதிற்புரந்த இச்செழும்பதியானது தொன்றுதொட்டுத் தமிழ்ப்புலவரும் புரவலரும் ஒருங்குகூடி உரையாடித் தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுதற்கு இயைந்த இடமாதலின், கூடல் என்னும் சிறப்புப்பெயர் எய்திநின்றது. அத்தகைய கூடலம்பதியிலே இம்மங்கலநாளிலே ஒருங்குகூடியிருக்கும் நம்மனைவருக்கும் தமிழணங்கின் பேரருள் உளதாகுக.

இமிழ்கடல்வேலியைத் தமிழ்நாடாக்கி வடபாலிமயத்திலே கயலும் வில்லும் புலியும் பொறித்த மூவேந்தரின் அறமும் மறமும் ஆற்றலும் நம் உள்ளத்திலே நீங்காதுநின்று ஒளி பரப்புவவாகுக.

தொன்மைநலஞ்சான்ற இந்நன்னகரிலே கன்மாப்பலகையேறியிருந்து தமிழாராய்ந்த செந்நாப்புலவர்தம் செழும்பனுவலிலே கற்போர் காணும் செம்மையும் அழகும் உண்மையும் நம் நெஞ்சகம் புகுந்து பொய்தீர்த்து இருள்கடிந்து நம்மை நன்னெறிப்படுத்துவவாகுக.

இரண்டரைக்கோடியென்னும் எண்ணினராகிய நம் தமிழ்க்குலத்தார் அனைவரும் பசியும் பிணியும் பகையும் நீங்கிப் பொருட்செல்வமும் செவிச்செல்வமும் அருட்செல்மும் ஏற்றபெற்றியெய்தப்பெற்று மண்ணகமாந்தர்க்கு அணியெனச் சிறந்து வாழ்வாராக.

இயலிசை நாடக முப்பாற்பொருளை ஆராய்தல்கருதி இப்பேரவையிலே வந்திருக்கும் நாமெல்லாம் காய்தல் உவத்தல் அகற்றி, நுண்மாணுழைபுலமுடைய நம் முன்னோரைப்போல நடுவுநிலை நெடுநகர்வைகி, உண்மைவழிச்செல்லும் உறுதிப்பாடுடையேமாகுக.

வரவேற்புக்கழகத்தாரது கேள்விக்கியைந்து இப்பேரவையிலே எழுந்தருளியிருக்கும் கல்வி கேள்விகளான்மிக்க பேரறிஞர்பலர் தாம் அரிதின் ஆராய்ந்துகண்ட செம்பொருண் முடிபுகளை அவைக்களத்து எடுத்துரைக்க நாமெல்லாம் கேட்டு மகிழ்வுறப்போகின்றோம். அங்ஙனம் மகிழ்வுறுத்தும் நீர்மையவாகிய அறிஞர்பேருரைக்குத் தோற்றுவாயாக ஒருசிலகூறுதல் இன்றியமையாததாயிற்று. அத்தகைய தோற்றுவாய்தானே சென்றகாலத்தில் நம் முன்னோரெய்திய சீரினையும், இனி எதிர்காலத்தில் நம்குலத்துதிப்போர் எய்தப்போகின்ற சிறப்பினையும், ஆங்கவர் சிறப்பெய்தும்வண்ணம் இன்று நாம்செய்தற்குரிய தமிழ்த் தொண்டினையும் வகுத்துக் கூறுமியல்பினதாகவேண்டும். சென்ற காலத்துச் சீரினை எதிர்காலத்தாருக்கு இயைவிக்கும் நிகழ்காலத்து வினையாகிய தமிழ்த்தொண்டானது மும்மையினையும் தழுவி நின்றது; ஆதலின் அத்தொண்டினை ஓரளவிற்கு விரித்துக்கூற முற்படுவாம்.

பள்ளியிற்பயிலும் தமிழ்ச்சிறார்முதற் பலகலை கற்றுத்தேறிய முதுதமிழ்ப்புலவர் ஈறாக அனைவரும் தமிழ்க்குலத்தாரின் உண்மை வரலாற்றினை உளங்கொண்டுணர்தற்குவேண்டிய சிறியவும் பெரியவுமாகிய வரலாற்று நூல்கள் பல தமிழ்மொழியிலே எழுதப்படல் வேண்டும். இதுவே நாம்செய்யவேண்டிய தமிழ்த்தொண்டுகளுள்ளே முதலில்வைத்து எண்ணுதற்குரியதென்பது எனது உள்ளக்கிடக்கை.

இற்றைக்கு ஏறத்தாழப் பதினாலாயிரம் யாண்டுகளுக்குமுன்பு நம்முன்னோர், பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே கிடந்த பெருநிலப்பரப்பிலே சீருறவாழ்ந்து எண்ணூலும் இசைநூலும் இயல்நூலும் வானநூலும் மனையமைப்புநூலும் கலமமைப்புநூலும் பிறநூலும் வல்லாராய், இந்நகர்க்கு மதுரைப்பெயரளித்த தொன்னகராகிய (கடல்கொண்ட) தென்மதுரையிலே நிலந்தரு திருவினெடியோனையுள்ளிட்ட அருந்திறன்மன்னர்தம் அவைக்களத்திலே சிறந்துவிளங்கினாரென்பதும், இற்றைக்கு ஏறத்தாழ ஒன்பதினாயிரமாண்டுகளின்முன்னே கடல்கோளினாலே குமரிநாடு

அழிந்தபின்னர், உவணன் ஓதக்கோன் என்னும் தலைவர்கள் வழிப் படுத்தக் கலத்திற்சென்று பாரசீகக்குடாவின் வடபாலதாகிய சுமேருநாட்டிற் குடியேறினரென்பதும், மேலும் அராபிநாட்டின் தென்பாலதாகிய ஏமநாட்டிலும், நீலநதிவளம்பெருக்கும் மிசிரி என்னும் எகிப்துநாட்டிலும், சுமேருநாட்டினையடுத்த ஏலநாட்டிலும் சிந்துநதிக்கரையில் விளங்கிய மீனுட்டிலும், ஆங்கதற்கு வடபால தாய்ப் பனிபடர்ந்த மலைகளாற் சூழப்பட்ட மரங்கோத்திநாட்டிலும், பிறநாடுகளிலும் வாழ்ந்தார்கள் என்பதும், சுமேருநாட்டின்வடக்கே சோழர்குடியேறிச் சோழதேயம் எனப் பெயரிட்டு வாழ்ந்த நாடே மொழிச்சிதைவினுலே சால்டியா எனப்பட்டதென்பதும், பண்டைக் காலத்திலே கலத்திற்சென்று பண்டமாற்றினுலே நிதிக்குவை யீட்டிய பாணிகள் தமிழ்நாட்டு வணிகராமென்பதும் ஐரோப்பா வுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையே கிடக்கும் மத்தியதரைக் கடலின் இருகரையிலும் வாழ்ந்து பண்டை யவனரும் உரோமரும் வருதற்குமுன்பு நாகரிகம் பரப்பிய மீனவர், எத்துருஸ்கர், நுமிதி யர், பேர்பெரியர், ஐபீரியர் ஆகியோர் தமிழ்க்குலத்தினராமென்ப தும், வில்லவராகிய சேரமன்னர் கலத்திற்சென்று மத்தியதரைக் கடலிலுள்ள கிரீத் (Creat) என்னும் தீவினைக் கைப்பற்றி ஆளுகை புரிந்தசெய்தியே 'வன்சொல் யவனர் வளநா டாண்டு' எனச் சிலப் பதிகாரத்துள்ளும், 'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து' எனப் பதிற்றுப்பத்தினுள்ளும் கூறப்பட்டதென்பதும் பிறவும் பண்டைக் காலவரலாறு (Ancient History) கூறும்நூல்களினுள்ளும் நம் நாட்டு மேனுட்டுப் பண்டையிலக்கியநூல்களினுள்ளும் பரவிக்கிடக் கின்ற முடிபுகளாம். இம்முடிபுகளுள் ஒருசில உலகபுராணம் என்னும் தலைப்பெயர்க்கீழ்ச் "செந்தமிழ்"ப்பத்திரிகையிலும் பிற வெளியீடுகளிலும் வெளிவந்ததனைத் தமிழன்பர்கள் அறிவார்கள்.

அஃதன்றியும் ஒருசாராசிரியர் தமிழ்க்குலத்தார், பசிபிக் பெருங்கடலினைக் கடந்துசென்று மத்திய அமெரிக்காவிலே குடி யேறி, மெக்ஸிக்கோ பீரு யுக்காட்டன் முதலிய இடங்களிலே வாழ்ந்து மாயாநாகரிகத்தைத் தோற்றுவித்தனரெனக் கூறுவர்.

இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து நோக்குமிடத்து உலகசரித்திரமே தமிழ்க்குலத்தாரோடு தொடங்குகிறதென்பதும், இற்றைக்கு ஒன்பதினுயிரம் ஆண்டுகளின்முன்னே பூவலயத்தின் நடுப்பாகம் முழுவதிலும் தமிழ்க்குலத்தார் சீரும் சிறப்புமுற்று வாழ்ந்தார் என்பதும் பெறப்படுகின்றன. கடல்கொண்ட அத்லாந்திஸ் (Lost Atlantic) தெங்கமரமும் யானையுமுடையதாயிருந்ததெனக் கூறப்படுதலின், கடல்கொண்ட குமரிநாட்டின் வரலாறே மத்திய அமெரிக்காவினின்று ஐரோப்பாவினையடைந்தஞான்று கடல்கொண்ட அத்லாந்திஸ் வரலாருக உருத்திரிந்ததெனக்கொள்வதும் ஒருதலை. இவைபோன்ற முடிபுகளையெல்லாம் வரலாற்றுநூற்றுறையிலே வல்லுநராயுள்ளோர் "காய்தல் உவத்தல் அகற்றி" நடுவுநிலைமையோடாராய்ந்து பொருட்டொடர்நிலையினமைந்த நூல் வடிவாக்கித் தருதல்வேண்டும்.

காலமும் கடலும் செல்லும் கவர்ந்தனபோக எஞ்சிநிற்கும் அருந்தமிழ்நூல்களின் வரலாற்றினைச்செவ்வியமுறையிலேஆராய்ந்தறிந்து நமதுமொழியிலும் பிறமொழியிலும் தமிழிலக்கியவரலாறுகள் சிறியவும் பெரியவுமாக எழுதித் தமிழ்நூல்களின் மதிப்பினை உலகிற்கு அறிவுறுத்த முயலவேண்டும். ஆங்கிலமொழியிலே நிகண்டுநூல் ஒன்றினை யாத்தமைத்த ரோஜெட் (Rojet) என்பாரோராசிரியர் அத்தகையநூல் பிறமொழியொன்றினும் இலதென முதற்பதிப்பிலே கூறினர். இரண்டாம்பதிப்பு முகவுரையிலே அமரசிங்கர் என்பாரியற்றிய நிகண்டுநூலொன்று வடமொழியிலே உளதெனக் குறிப்பிட்டார். பிங்கலம் திவாகரம் முதலிய நிகண்டுநூல்கள் தமிழ்மொழியிலுள வென்னும் உண்மையினை அவர் அறிந்திலர்; தமிழராகிய நாம் அறிவித்திலேமாதலின்.

பாரதநாட்டு இசையினைக்குறித்து ஆங்கிலத்திலே நூலெழுதிய பக்ஸ் ஸ்டிராங்குவேய்ஸ் என்னும் பேரறிஞரும் பிறரும் வடமொழியிசைநூல்களையே குறிப்பிட்டுச்சென்றனர்; தமிழராகிய நாம் நமது இசைக்கலையினைக்குறித்து அவர்போன்ருருக்கு அறிவித்திலேமாதலின். சாரங்கதேவரியற்றிய சங்கீதரத்நாகரம்

தேவாரத்திற்பொதிந்த தெய்வ இசையினைப் பெருகக் குறிப்பிடுகிற தென அறிந்திருந்தும் நம்மவருள் ஒருசாரார் அவ்வுண்மையினை உலகிற்குணர்த்தாது மறைக்கமுயல்கின்றனர்.

இனி, நம் கைக்கு எட்டாது அழிந்துபோன நூல்களைக்குறித்துப் பழையவுரையாசிரியர் கூறுகின்ற வரன்முறைகளையும் மேற்கோட்சூத்திரங்களையும் பொன்னேபோற்போற்றி நூல்வடிவாக்கி அச்சேற்றிப் பாதுகாக்கவேண்டும். இவ்வாறு செய்தற்குரியன:– குண்டலகேசி, வளையாபதி, தகடூர்யாத்திரை, இசைநுணுக்கம், சயந்தம், குணநூல், செயிற்றியம், பரதசேனாபதியம், பஞ்சமரபு, இந்திரகாளியம், மதிவாணர்நாடகத்தமிழ்நூல், ஆசிரியமாலை, மாபுராணம் என்று இத்தொடக்கத்தன. "நாடகத்தமிழ்நூலாகிய பரதம், அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன:" என்று அடியார்க்குநல்லார்கூறுதலின், தமிழ்மொழியிலே பரதம் எனப் பெயரியநூலொன்று இருந்து இறந்த உண்மை புலப்படுகின்றது. இதற்கும் வடமொழிப் பரதத்துக்கும் உள்ள தொடர்பு அறிஞர் ஆராய்ந்தறிதற்குரியது. வரன்முறையாராய்ச்சி சிறிதும்வாய்க்கப் பெறாத அரபத்தநாவலர் என்னும் பிற்காலத்துநூலாசிரியர் தமது தமிழ்முன்னோர்வழித் தமக்குக்கிடைத்த அரும்பொருண்முடிபுகளைப்பொதிந்து தாமியற்றிய பரதம் என்னும் நூலுக்கு வடமொழி முதனூல் கற்பிக்கும் விழைவினாலே பதின்மூன்றுநூற்றாண்டிலிருந்த சாரங்கதேவரை அகத்தியர்க்குமுன் இருந்தவராக்கிச் சுத்த பௌராணிகமதத்தில் நிற்பாராய், வடமொழியிலே சாரங்கதேவ முனிவர் பரதநூலை ஓரிலக்ஷம் கிரந்தங்களாற் கூறினர் எனவும், அவர்நூற்கு வழிநூல்செய்த அகத்தியனார் ஆறாயிரஞ்சூத்திரத்தினால் அறைந்தனரெனவும், சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவின் மாந்தர்பொருட்டாகத் தாம் சுருக்கநூல்செய்ததாகவும் கூறிச் செல்கின்றார். அவர்கூற்று, எனது அருமைநண்பரொருவர் பௌராணிகமனப்பான்மையினை எள்ளி நகையாடும் கருத்தினொடுவெளியிட்ட 'பள்ளியகரப் பழங்கதை'யை நினைவுக்குக்கொண்டுவருகிறது.

பரதம் என்னும் பெயர்க்காரணத்தையாராய்தற்குச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்கூறிய முடிபுகள் நமக்கு உதவுகின்றன. ஒன்பான்சுவையும் எண்வகைமெய்ப்பாடும் என்னும் இவற்றோடு இயைபுடைய "இரதம்" என்னும் மொழியினை அரும்பதவுரையாசிரியர் பலகால் வழங்குகின்றார். வடமொழியலங்கார நூலார்கண்ட "ரஸம்", "பாவம்" என்னும் மொழிகளின் பொருளினை இம்மொழி தந்துநின்றது. "பண்", "இரதம்", "தாளம்" என்னும் மூன்றுறப்படங்கிய பிண்டம் 'பரதம்' எனலாகும். முத்தவிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையாரது தேவாரத்திருப்பதிகத்திலே,

> பண்ணும்பதமேழம்பலவோசைத்தமிழவையு
> முண்ணின்றதோர்சுவையும்முறுதாளத்தொலிபலவும்
> மண்ணும்புனலுயிரும்வருகாற்றுஞ்சுடர்மூன்றும்
> விண்ணும்முழுதானானிடம்வீழிம்மிழலையே."

என இறைவனது இசையுருவினையும் எண்பேருருவினையும் கூறிய அருமைத்திருப்பாடலிலே, "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்" எனப் பண்ணீர்மையும், "உண்ணின்றதோர்சுவையும்" என இரதமும், "உறு தாளத்தொலிபலவும்" எனத் தாளக்கூறுபாடுகளும் மேற்காட்டிய முறையிலே அமைந்துநிற்றல் காண்க. "பரதமுனிவர்செய்தலிற் பரதமாயிற்று. அப்பெயரினார் தமிழுக்குரியரல்லர்" எனின், "அரசகுமாரும் பரதகுமாரும்" என அரசரோடு உடன்வைத்தோதிய பரதர்குலம் தமிழுக்குரியது; அக்குலத்தினரொருவர் தமிழ்ப்பரதத்தைச் செய்தாரெனக்கொள்ளுதலில் நேர்ந்த இழுக்கென்னை? என்போம்.

பாவம் இராகம் தாளம் எனும் இவற்றைக் கூறும்நூல் "பரதம்" எனப் பெயரெய்தியது எனப் பிற்காலத்தார் கூறினர். வடமொழி நான்காம் பகரத்தை முதனிலையாகக்கொண்ட "பாவம்" என்னும் சொல், யாமறிந்தவரையிலே பழந்தமிழ்வழக்கில் வந்திலது. அங்ஙனமாதலின், அடியார்க்குநல்லார்கூறும் தமிழ்ப்பரதத்தின் முதனிலையெழுத்து இருமொழிக்கும் பொதுவாகிய முதற்பகரமேயாகுமென்பதும், அது பண்ணைக்குறித்ததென்பதும் அறிதற்குரிய.

அவ்வண்ணமே இடைநின்ற "ர" கரம் பழந்தமிழ்வழக்கிலுள்ள இரதத்தினைக் குறித்ததெனவும், அவ்வழக்கிற் காணப்படாத "இராக"த்தினைக் குறித்திலதெனவும் அறிதல்வேண்டும். "பண்ணும் இரதமும்" என்னும் முறையினை மறந்த பிற்காலத்தார் இரதமாகிய பாவத்தினைமுன்னும்பண்ணீர்மையாகிய இராகத்தினைப் பின்னுமாக மாறிவைத்து இடர்ப்படுவாராயினர்.

வடமொழிப் பரதமும் சங்கீதரத்நாகரமும் சிறந்தமுறையிலே தமிழில் மொழிபெயர்க்கப்படுவவாயின், அம்மொழிபெயர்ப்புநூல்கள் தமிழிசையின் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவுவ என்பது எனதுகருத்து. பல்கலைக் கொடைவள்ளலாகிய செட்டிநாட்டரசரவர்கள் தங்கள் பல்கலைக்கழகத்தின்மூலமாகவோபிறவாயிலாகவோ தமிழ்வளர்ச்சிக்குவேண்டிய இப்பணியினையும்செய்து நிறைவேற்றுவார்களெனத் தமிழுலகம் எதிர்பார்க்கின்றது.

இயற்றமிழ்த்துறைக்குத் தலைமைதாங்கும் யான் அத்துறையோடமையாது இசைத்தமிழினைக்குறித்துப்பேசப்புகுந்தது பொருத்தமாமோ என இப்பேரவையோர் ஐயுறலாம். அவ்வையுறவினை நீக்குதற்பொருட்டு இசைக்கலைக்கு உறையுள் எனப் போற்றற்குரிய தஞ்சைமாநகரிலே பரம்பரை யிசைச்செல்வர்குலத்துதித்தவர்களும் சென்னைப் பல்கலைக்கழகத்து இசைப்பகுதியாசிரியராகக் கடமைபுரிபவர்களுமாகிய திரு. K. பொன்னையாபிள்ளையவர்கள் அண்மையில் வெளிவந்த "குமரன்" இசைமலரிலே கூறியதோர் சீரியவாசகத்தினை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது வருமாறு:—

"இனி, இயற்புலவர்கள் இசைப்புலவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். இயற்புலவர்கள் இசையுணராமலும் 'இசைப்புலவர்கள் இயலையுணராமலுமிருந்ததுதான் தமிழிசைமறைவிற்கு முதற்காரணம். இயலின்றி இசையில்லை; இசையின்றி இயலில்லை. வாய்க்காலும் அதன்வழியே ஓடுகின்ற நீரும்போல் இயலும் இயல்வழியோடும் இசையும் இருக்கின்றன. தண்ணீரில்லாதபோது வாய்க்காலிருந்தும் பயனில்லை. வாய்க்கால் இல்லாத தண்ணீர் சரியாகப் பயன்படாமல் பரந்தோடிக் கெட்டுவிடும். இரண்டும் இருந்து

தண்ணீர் பாயுமானல் வயல் நன்ருகவிளையுமாறுபோல, இயலும் இசையும் கலந்து மிளிருமானல், கேட்போருள்ளத்தை மகிழ்விக்கும். ஆகவே இயற்புலவர்களும் இசைப்புலவர்களும் ஒன்றுபட்டால்தான் தமிழிசையினிமையைக் காணமுடியும்." ஆதலினலே இயற்புலவர்களை விளித்து, "ஓ இயற்புலவர்களே! இசைவளர்ப்போம் வம்மின்" எனவும், இசைப்புலவர்களைநோக்கி, "ஓ இசைப்புலவர்களே! இயல்வளர்ப்போம் வம்மின்" எனவும் நாம் கூறுவோமாக. கதைதழுவிய கூத்தாகிய நாடகமானது இயல் இசை யிரண்டினையும் தன்னுள் அடக்கியதாதலின், நாடகத்துறைவல்லோர் முத்தமிழ்வளர்ச்சிக்கு விரைந்து முன்னிற்பாரென்பது சொல்லாமலே அமைகின்றது.

இயற்புலவர் கற்றற்குரியநூல்களிலே இசைநாடகமுடிபுகளும் விரவிவருதலை ஒருசிறிது காட்டப்புகுவாம். அருந்தமிழ்ப்புலவர் வகுத்துரைத்த அகத்திணைத்துறைபலவும் நிரலுறவமைந்த தஞ்சைவாணன்கோவைபோல்வன, தலைவன் தலைவி செவிலி நற்ருய் பாங்கன் பாங்கி அறிவர் கண்டோர் காதற்பரத்தையர் காமக்கிழத்தியர் என்று இன்னோர் நாடகபாத்திரங்களாகத் தோற்றி நடிக்கும் காதல்நாடகங்களேயாம். காளிதாசப்பெருங்கவி யாத்த சாகுந்தல நாடகத்தோடு இவை ஒத்த பொருண்மைய. ஆனிரைகவர்தலும், போர்விழைந்தேகலும், அரணங்கோடலும், மலைதலும், வென்றி மாலைசூடலும் என்று இத்தொடக்கத்த புறத்துறைகளை நிரலுறக் கூறும் வெண்பாமாலைபோல்வன அறனும் மறனும் தழுவிய வீர நாடகங்களேயாம். வடநூற்புலவர்வகுத்த நால்வகைவிருத்திகளுள்ளே கைசிகி, பாரதிவிருத்திகள் அகநாடகங்களுள்ளும் ஆரபடி சாத்துவதிவிருத்திகள் புறநாடகங்களுள்ளும் வருவன.

தொல்லாசிரியர் விரிவுறக்கூறிய மெய்ப்பாட்டியல் இயற்றமிழுக்கு அணியாந்தகைமையது, இசைநாடகங்களுக்கு இன்றியமையாத உறுப்பாந்தகைமையது. செய்யுளியலுட்கூறிய வண்ண விகற்பங்களும் எழுத்தினுட்கூறிய மாத்திரை அளபெடை என்றின்னவும் இசைப்பகுதிக்கும் உரிய. வீரசோழியநூலும் உரையும்

சந்தி சுவை யுள்ளிட்ட நாடகவியல் விலக்குறுப்புக்களையும் செந்துறை வெண்டுறை மார்க்கங்களையும் சிந்து திரிபதை சவலை சமபாதவிருத்தம் தாண்டகம் என்னும் இசைப்பாவகைகளையும் வண்ணக்கூறுபாடுகளையும் தெள்ளிதின் உரைப்பன. எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் இயற்பகுதியைந்தும் இசைநாடகத்துக்கு அடிப்படையான உண்மைகளும் தொல்லாசிரியர் வகுத்த எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றுறுப்படங்கிய பிண்டத்தினுள்ளே ஒருவாறு அடங்கிநிற்பவாதலினன்றோ இயலிசைநாடகத் தொடர்நிலைச்செய்யுளாகிய சிலப்பதிகாரத்துக்கு உரைவகுத்த அடியார்க்குநல்லார்,

"எழுத்தின் றிறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலோன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்"

எனக் கூறியமைந்தார்.

அவர் அவ்வாறு கூறினரேனும், சிலப்பதிகாரநூலினை முழுதும் படித்து உவகையுறும் விழைவுடையோர் இசை நாடக நூற்றுறைகளை அறிந்துகொள்வது இன்றியமையாததென்பதை யாவரும் உணர்வர். சேரமுனிவன் செய்தளித்த சிலப்பதிகாரத்தை உளங்கொள்ளும் ஆர்வமானது பிடர்பிடித்துந்தப் பதினெட்டாண்டுகளின்முன்னே நாடகநூன்முடிபுகளை ஓரளவிற்குக்கூறும் மதங்கசூளாமணியினைக் குருவருளும் தமிழ்க்குலமுதல்வர்தம் ஆசிமொழியும் உறுதுணையாகக்கொண்டு ஒருவாறு எழுதிமுடித்தேன். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் அதனை உவந்தேற்று வெளியிட்டனர். கழிந்த பத்தாண்டுகளாகப் பழந்தமிழிசைமரபினை யான் ஆராய்ந்து கொண்டுவருதலை இப்பேரவையானது நன்கறியும். இமயவல்லியாகிய அங்கயற்கண்ணம்மையின் பேரருளினாலே இமயத்தில் உறைந்த நாட்களிலே முன்பு தெளிவுபடாத உண்மைகள் பல நன்கு தெளிவாயின. அதனாற் பத்தாண்டுகளாகச்செய்துவரும் ஆராய்ச்சி

முற்றுப்பெறும்நிலையிலிருக்கிறது. தமிழ்ப்பெருமக்களின் உளங்கனிந்த அன்பாகிய அருந்துணையும் எனக்குப் பெருகக் கிடைத்துளது என்பதை யான் உணருகிறேன். ஆதலினாலே பழந்தமிழிசைமரபு விரைவிலே நூலுருவமாக வெளிவரலாம்.

கண்டத்தினாலோ கருவியினாலோ இசைமரபு தவறாது பாடுகின்ற ஆற்றலை இயற்புலவரெல்லாரும் பெறுதல் அரிதெனினும், இசைப்புலவன் அமைத்துத்தந்த ஆளத்திக்குத் தக, இசைப் பாடல்களைச் சுவையமைய ஆக்குந்திறமையினை இயற்புலமை நிரம்பும் விருப்புடையோரனைவரும் முயன்றுபெறுதல்வேண்டும். அஃதன்றியும் தமிழணங்கிற்கு அணிகலனாகச் சேரமுனிவன் செய்தளித்த சிலப்பதிகாரச் செழும்பனுவலினை அரங்கேற்றுகாதை, ஆய்ச்சியர்குரவை என்றித்தொடக்கத்த புறநீங்கலாகப் படித்தோமென இயற்புலவர் சொல்வது அவர்க்குப் பெருமையாகாது. முத்தமிழ்க் காப்பியத்தினை முற்றும் படித்தின்புறுதற்குக் கருவியாக இசையியல் நாடகவியல்களை ஆராய்ந்து தெளியவேண்டும்.

இனி, இடைக்காலத்திலே சமண பௌத்த ஆதிக்கம் கழிந்த பின்னர்ச் சைவ வைணவ மதங்கள் மறுமலர்ச்சியடைதற்குக் காரணராயிருந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் இன்னிசைப் பாடல்களினாலே தொண்டருள்ளத்திலே அன்புநீர்பாய்ச்சி அருள் வெள்ளம் பரவச்செய்தார்கள். "பண்ணீர்மைமொழிப் பரவையார் கொழுந" ராகிய சுந்தரமூர்த்திநாயனார், தாம்பாடிய திருக்கோலக்காத்திருப்பதிகத்திலே,

> "நாளுமின்னிசையாற்றமிழ்பரப்பும்
> ஞானசம்பந்தனுக்குலகவர்முன்
> தாளமீந்தவன்பாடலுக்கிரங்குந்
> தன்மையாளனை"

என்னுமிடத்து முத்தமிழ்விரகராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரது தமிழ்த்தொண்டினைக் குறிப்பிடுகின்றார். அத்தொண்டு

எந்நீர்மையது? இன்னிசையே கருவியாக நாடெங்கும் இயற்றமி ழினைப் பரப்பிய நீர்மையது. சுருங்கிய காலவெல்லையினுள்ளே ஆளுடையபிள்ளையார் தமிழ்நாடு விழித்தெழுமாறு செய்த அற்புதச் செயலுக்கு உறுதுணையாகநின்றன ஆண்டவனதுபேரருளும் இசையோடியைந்த இயலும் எனக் கூறுவது மிகையாகாது. "மருவியவேழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பாற் பெருகிய கண்மழைபொழி"யும் புகலிப்பெருந்தகையாரும், மற்றைய குர வர்களும் அருளிச்செய்த இன்னிசைச்செழும்பாடல்கள் தமிழ் மக்களுடைய வுள்ளத்திற் புகுந்து ஊக்கியகாரணத்தினாலேதான், தமிழர் மனவலியும் உடல்வலியும்பெற்றுச் சோழமன்னரது படைத்தலைமையிலே கலத்தினும் காலினும் சென்று வேற்றுநாடு களை வென்று எத்திசையிலும் தமிழ்முழங்கச்செய்தார்கள்.

நம்முன்னோர் இயல் இசை நாடக முத்தமிழ்த்துறைகளை மாத்திரமல்ல; கலைத்துறைகள் வேறுபலவற்றையும் போற்றினார்க ளென்பதைப் பழைய நூல்களால் அறிகின்றோம். சிற்பத்துறை யிலும் ஓவியத்துறையிலும் நம் முன்னோர் நிரம்பிய புலமைபடைத் திருந்தாரென்பதற்குத் தென்னிந்தியாவிலுள்ள அழகிய கோயில்க ளே சான்றுபகருகின்றன. மருத்துவநூலிலே அவர் படைத்துள்ள ஆற்றலினைச் சித்தவைத்தியமுறை கண்கூடாகக் காட்டுகிறது. மரக்கலமமைக்குநூலும் வானநூலும் பிறவும் முழுதும் அழிந்து போகவில்லை. ஆதலினாலே அவைதம்மையெல்லாம் பண்டைப் பெருநிலைக்குக் கொண்டுவருதல்கூடும்.

காலநீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங்காலத் துச்சிறப்பினைமாத்திரம் பறையறைந்துகொண்டிருப்பாரெனின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் முழுதும் இழந்தநீர்மைய ராதலும் கூடும். சென்ற நூற்றாண்டிலே ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் விஞ்ஞானநூல் மிகவும் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச்செல்வத்தைத் தமிழ்மொழி பெறுதற்காவன செய்தல் சிறந்த தமிழ்த்தொண்டாகும். லண்டன்மாநகரிலுள்ள

வேத்தவை (Royal Society) என்னும் அறிவுநூற்புலவர்குழு வானது, நமது தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ்நாட்டுக் கலைக்கழகங் களிலே கல்விபயின்று கணிதநூலினும் விஞ்ஞானநூலினும் பெரும் புலமைபடைத்த திரு. இராமாநுசம், திரு. இராமன், திரு. கிருஷ் ணன் என்று இன்னோருடைய புலமையைப் பாராட்டி அவையகத்தா ராக்கியசெய்திகேட்டு நாமெல்லாம் பெருமகிழ்வடைந்தோம். கணித விஞ்ஞான அறிவு நிரம்பிப் பூவுலகத்துப் பேரறிஞர்குழுவினி லே தலையணியிலிருக்குமாற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்துகொண்டோம். அண்ணாமலை பல்கலைக்கழகத்தாரின் சிறந்த முயற்சியினாலே தமிழ்மொழியிலே பூதநூல் (Physics), வேதிநூல் (Chemistry), புதிய தருக்கநூல் (Logic) என்று இவை வெளி வந்துவிட்டன. ஆட்சியும் குணமும் காரணமாகக் கலைச்சொற்கள் நாளடைவிலே செம்மையுறுந் தன்மையின. அங்ஙனமாதலின் வடமொழி தென்மொழி மேற்றிசைமொழி யென்னும் மூன்றீர மொழிகளும் இற்றைநாளிலே அறிவுப்பெருங்கடலிலே கலத்தலை யாமெல்லாம் விருப்பொடு ஏற்றுக்கொள்வோமாக. தமிழ்நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெறுகிற நன்னாளிலே அறிவுக்கடலி லிருந்து எழப்போகின்ற தமிழ்முகிலானது புன்மையாகிய உவர்த் தன்மையினை முழுதும்நீக்கித் தூய தமிழ்நீரினை நாடெங்கும் பொழி யக் காண்போம். அந்நாள் மிகவும் அணுகிவருகிறதென்பதற்கு இம் முத்தமிழ் மகாநாடே சான்றுபகருகின்றது. மூடநம்பிக்கை யோடு கூடிய பௌராணிக மனப்பான்மையென்னும் இருள் அகல் கின்றது. அறிவுக்கதிரோனுடைய இளவெயிலானது நம் உள்ளத் துக்கு உவகையையும் உடலத்துக்குப் புதிய வலிமையையும் தரு கின்றது. புத்தம்புதியநூல்கள் பலவற்றைப் புனைந்து தமிழன்னை யின் திருவடிகளிலே காணிக்கையாக வைப்போமாக. சோமுனிவன் செய்தளித்த சிலம்பினையணிந்த அச்சீறடிகள் நம் நாவிலே களிநடம் புரிபவாகுக. உறக்கம்நீங்கி விழித்தெழுந்த தமிழராகிய நாம் ஓய் வின்றியுழைத்து உலகனைத்தினும் நம் மொழிச்செல்வத்தைப் பரப்புதற்கு முயல்வோமாக.

தமிழ்நூற்பரப்பினை உளங்கொண்டுநோக்குமிடத்துக் கடைச் சங்கத் திறுதிக்காலம்முதல் இதுவரையும் தமிழ்மொழியிலே வெளி வந்தநூல்களுட் பெரும்பாலன பலவாகிய சமயங்களைத் தழுவிய நூல்களாமெனக் காண்கின்றோம். சமண பௌத்த முனிவர்களும் சைவ வைணவப் பெரியார்களும் செய்ததுபோலவே அண்மையிலே இந் நாட்டினரொடு கலந்த இஸ்லாமிய கிறிஸ்தவ சகோதரர்களும் தத்தம் சமயவுண்மைகள் பொதிந்த நூல்களைத் தமிழ்மொழியிலே இயற்றி வெளியிட்டனர். அங்ஙனமாதலின் தமிழ்வளர்க்கும் மகா நாடுகளும் கழகங்களும் உண்மைஞானிகளைப்போலவே சாதி மத வேறுபாடின்றி மன்பதையோரனைவரையும் ஒப்பநோக்குமியல்பின வாதல்வேண்டுமென்பது வெளிப்படை. சமயக்கணக்கர்தந்திறங் கேட்ட மணிமேகலை பல்வேறு சமயவாதிகளும் உரைத்த பொருளினை உளங்கொளக் கேட்டதுபோல, உண்மைத்தமிழன்ப ராயினார் தமிழிலுள்ள தலையாய சமயப்பெருநூல்களை அவ்வந்நூலினு ணுணர்த்தப்படும் சமயங்களுக்குரியராகிய அறிஞர்பாற் கேட் டமைவது சாலச்சிறப்புடையதாகும். சாதி மத வேறுபாடின்றியும் அரசியற்கட்சிப் பிரிவினையின்றியும் செய்தற்குரியதொண்டு தமிழ்த் தொண்டு.

தமிழ்மொழியை மரபுதவறாது ஆராய்ந்து கற்றோரும் அவ் வாறு கற்றுத்தேறியவரை வழிபடுவோருமாகிய இருசாராருமே உண்மைத் தமிழ்த்தொண்டிற்கு உரியோராவர். "கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று" என்னும் அறிஞருரையும் இவ் வுண்மையினையே வலியுறுத்துகின்றது. முறையாகக் கற்றலுஞ் செய்யாது கற்றுவல்லாரையடைந்து வழிபாடியற்றிப் பெறுதற் குரிய கேள்விச்செல்வமும் எய்தப்பெறாது தமிழ்த்தொண்டுசெய்ய முற்படுதல் பயனில்செயலாகும். முன்னோர்மொழி பொருளை யும் மரபுபட்ட இலக்கணமுடிபுகளையும் ஆராய்ந்தறிந்துகொள்ளாது நெறியறியாமாக்களை மயக்கி, அவர்தம்மை நெறியல்லாநெறியிற் புகுத்தி ஆரவாரிப்போர்செயலானது குருடனைக் குருடன் வழி நடத்துவதுபோலாகும்.

அவைக்களத்துச் செல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை "வேந்தன்மொழி" (King's English) என அம் மொழிப்புலவர் விதந்துகூறுவர். அப்பரிசே யாமும் அவைக்களத் திற் செல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழினைப் "பாண்டியன் தமிழ்" என்போம். "எது தமிழ்?" என வினவுவாருக்குப் "பாண்டியன்றமிழே தமிழ்" என்பது விடையாகும். அதுவே நிலை பேறுடையது, அறிஞர் போற்றற்குரியது. பொருள்வருவா யொன்றினையே கருதி மனம்போனவாறு மரபுதவறியெழுதும் மொழிவழக்கானது மழைக்காலத்திலேதோன்றி அக்காலங்கழிய மறைந்துபோகின்ற சிறு பூடுகளைப்போல் நிலைபேறில்லாதது. நிலை பேறுடைய உண்மை (Truth), அழகு (Beauty), செம்மை (Goodness) என்னும் இவைதம்மையே அறிஞரது உள்ளம் என் றும் அவாவிநிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினை யும், இசைத்தமிழானது அழகினையும், நாடகத்தமிழானது செம் மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக்காட்டுவன. பேருண்மையும் பேரழகும் வரம்புகடந்த செம்மையும் இறைவனுக்குரிய குணங்க ளாகச் சமயநூல்களாற் கூறப்பட்டன. இவைதம்மை வெளியிட் டுரைக்கும் ஆற்றலுடைமையினாலேதான் மொழிகள் தெய்வத் தன்மையுடையவாகக் கருதப்பட்டன. யாம் முதலிலே கூறிய தெய்வவணக்கச்செய்யுளினுள்ளே, குமரகுருபரமுனிவரர், தெய் வத்தினைப் "பழம்பாடற்றொடையின்பயனே" எனவும், "நறை பழுத்த துறைத்தீந்தமிழி னொழுகு நறுஞ்சுவையே!" எனவும், "தொழும்பருளக்கோயிற் கேற்றும்விளக்கே!" எனவும் போற்றி வழிபடுகின்றார். இத்தகைய வழிபாடு சமயங்கடந்த சமரஸநிலை யினைத் தருவது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்"

என்னும் பொய்யாமொழியின்படி ஆராய்ந்து அமைவரக்கற்ற கல்வியின்பயன் வாலறிவனாகிய இறைவன்பால் உள்ளத்தைச் செலுத்துதலேயாம்.

தமிழ்மொழிக்கு நலனளிக்கும் பெருங்காப்பியங்களும் அந் நீர்மையவாகிய மதுரைக்காஞ்சிபோன்ற சங்கச்செய்யுட்களும், காப்பியத்தலைவனது அருள் வலி ஆண்மை கல்வி அழகு அறிவு இளமை ஊக்கம் ஈகை போகம் புகழ் நண்பு சுற்றம் என்னும் இவைதம்மை விரித்துக்கூறுமுகத்தான் அத்தகைய செம்மை நலங்களை நாமும் நமதுவாழ்க்கையிலே இயன்றவரை வெளிப்படுத்து மாறு நம்மை ஊக்குகின்றன. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப ருடைய வாக்கின்வலிமையினால் அளத்தற்கரிய பெருமைவாய்ந்த காப்பியத்தலைவனது குணமாகிய கடலிலே யாமும் படிந்தாடி நல மடைகின்றோம். இளங்கோவேந்தன் உவந்தளித்த தொடர்நிலைச் செய்யுள் துணையாக "உரைசால்பத்தினியை உயர்ந்தோரேத்தும்" உண்மையினைக் காண்கின்றோம். அஃதன்றியும் பழந்தமிழ்நாட் டினையாண்ட சேர சோழ பாண்டியரென்னும் முடியுடைவேந்தர் மூவாது அறனும் மறனும் ஆற்றலும் பிறவும் நம் உளத்துக்கு ஒளி யைத் தருகின்றன.

சமயக்கணக்கர் தந்திறஞ்சாராது நடுநிலைமேவி எப்பாலார்க்கும் பொதுவாகிய நெறியினைக்காட்டிய வள்ளுவர்வாய்மொழியானது யாம் எல்லாநலனையும் அடைதற்குரிய வழியினைக் காட்டுகின்றது. இவை இவ்வாறுதலினன்றோ அண்மையிலிருந்த பெருந்தமிழ்ப்புலவ ராகிய சுப்பிரமணியபாரதியார்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போற்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை யுண்மைவெறும்
புகழ்ச்சி யில்லை"

என நமக்கு உறுதிமொழிகூறுகிறார். இம்மகாநாடு செவ்விதின் நடக்கும்பொருட்டு ஆண்டவனுடைய திருவருளினை வேண்டித் தோற்றுவாயாக யான் சொல்லுதற்கு எடுத்துக்கொண்ட இவ்வுரை யினை நிறைவுசெய்கிறேன்.

பொய்யும் மெய்யும்

(நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்)

போய் மெய் என்னும் இருசொற்களினுடைய வரலாற்றை நாம் ஆராயுங்கால், நம் தமிழ்முன்னோர் இவற்றை எத்துணை நுட்பமான கருத்தமைய ஆக்கிவைத்துப்போயினர் எனக் கண்டு வியப்புறலாகும். இவ் விருசொற்களும் ஒருதொடரில் நிற்கும் போது, முறையே உண்மையல்லாதது, உண்மையானது எனும் இரு அர்த்தத்தையும் தரும். இவ்வர்த்தங்கள் மனத்திற் றரிக்கப் படும் இரு எண்ணங்களேயேயன்றிச் சடமான பொருள்களைக் குறிப்பனவல்ல. ஆதலால், உலகில் வழங்கும் பன்னூறுமொழி களினுடைய தோற்றத்தையும் ஆராய்ந்துள்ளோரனைவருக்கும் ஒப்பமுடிந்தபடி, சொற்களெல்லாம் முன்பு ஐம்புலன்களுக்கு விடய மான சடப்பொருள்களையோ செயல்களையோ குறித்து, அப்பால் படிப்படியாக, நினைவுருவமான அர்த்தங்களைக்கொண்டன என் றிருக்கின்றமையால், "பொய்" "மெய்" எனும் இருசொற்க ளும் ஆதியிற் கொண்டிருந்த சடசம்பந்தமான அர்த்தங்கள் யாவை, அவ்வர்த்தங்கள் எவ்வாறு காலச்செலவில் மேற்குறித்த இரு எண்ணங்களைச் சுட்டுவனவாயின என ஆராய்வாம்.

"பொய்" எனும் சொல்லிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி ஐந்தாவதாகத் தரும் அர்த்தம் "உட்டுளை" என்பது. ஆறுவது "மரப்பொந்து". ஆயின், இச்சொற்குத் துளையுடைமை அல்லது கிடங்காய்ப் பொள்ளலாயிருத்தலே முதல் அர்த் தம் என்பது, இதனோடு அடியொத்த பிறசொற்களைவைத்து ஒப்பு நோக்குங்கால் தெளிவாகும். பொள்ளுதல் போழ்தல் (துளைத்தல்), பொளி (துளை), பொய்கை (போழ்ந்து எடுத்த அல்லது இயற்கையிற் கிடங்காயுள்ள நீர்நிலை), பொந்து, போறை என்பனவற்றிற்கு முதற்கண் பொருந்திய அர்த்தம், உட்டுளையின் விகற்பங்களே.

இவ்வாறே "பொய்"க்குப் பெயராகிய "பொக்க"த்தை அதற் கின மான பொக்கு, பொக்கணை, பொக்குள் ஆதியவற்றோடு நோக்கும் போது அது ஆதியில் துளை, கிடங்கு எனும் அர்த்தத்தையே கொண்டது எனல் வெளிப்படும். போழலுக்கு (போழ்ந்தது) இனமாகிய "புரை"யைப்பற்றியும் இதனைச் சொல்லவேண்டும். இதற்கு முதலர்த்தம் உட்டுளை எனத் தமிழகராதி உள்ளபடி காட்டுகின்றது. அதில் ஐந்தாவது அர்த்தமே பொய். புரைக்கு உள்ள ஆதியர்த்தத்தை, இன்றைக்கும் பெண்கள் தம் குழந்தை களின் சுவாசக்குழலில் யாதாவது உணவுப்பொருள் தடக்கும் போது "புரைக்கேறிவிட்டது" என்று சொல்லுவதிற் கேட்கலாம். பழந்தமிழிலிருந்து எழுந்ததாகிய சிங்களத்தில் நமது புரைச் சொல் "பொய்" எனும் அர்த்தத்தில்மட்டும் பொறு என வழங்கு கின்றது. மறுபால், "பொய்"ச்சொல், தனது ஆதியர்த்தத்தில், யாழ்ப்பாணத்திலே கட்டுவேலைக்காரருட் பயிலுவதைக் கேட்க லாம். அன்னோர் சாந்திட்டு அடுக்கும் கற்களுக்கிடையில் நீக்கல் அல்லது வெளிப்புத் தோன்றுமிடத்து அதனைப் "பொய்ப்பு" என் பர். பொய்ப்பு=நீக்கல், ஓட்டை. "பொய்" என்பதற்கு அசத்தியம் எனும் அர்த்தமல்ல; உட்டுளை எனும் அர்த்தமே தலையானது என்பது, சொற்கள் ஆதியில் பஞ்சபுலன்களுக்கு விடயமான சடப் பொருள்களையும் செயல்களையுமே சுட்டின என மொழிநூல்வல் லோர் அறுதியிட்டிருக்கும் முறையை நோக்கும்போதும் நன்றாகத் துணியப்படும்.

பொள்ளுதல் அல்லது போழ்தல் எனும் வினையினின்று "பொய்" எவ்வாறு படிப்படியாய் மருவிவந்தது என்பதைப் "பொய்" எனுஞ்சொல் தெலுங்கிற் பொல்லு எனவும் கன்னடத் தில் புளி, ஹுஸி எனவும் இருத்தலிற் காணலாம். ஒருவேளை தெலுங்குப் "பொல்லு" பொறலு (புரள்) எனும் உருவத்தின் திரிபாயின், அது "பொய்" எனும் உருவத்துக்கு நேரே பிறப்பிட மாகாது. எப்படியிருப்பினும், பொள்ளினின்று பிறந்து போழ் என

நின்ற உருவம் "பொய்"யாயினமை ஒலித்திரிபுக் கட்டளைகளுக்கு முழுதும் பொருத்தமான ஒரு வரலாறே என்பதில் மயக்கம் இன்று. ளகரமும் ழகரமும் தம்முள் மயங்குதல் பெருவழக்கு. "பழம்" பயன் என வந்தாற்போல, ழகரம் யகரமாவதும் திராவிட மொழிகளிற் பயிலுவதொன்று. இனிப் "பொய்"க்கு இருந்த உட்டுளை அல்லது ஓட்டையெனும் அர்த்தத்திலிருந்து அசத்தியம் எனும் அர்த்தம் உண்டானது எவ்வாறு? நாம், இங்கு எல்லா மொழிகளிலும் வழங்கும் பொருட்டிரிபுமுறையைச் சற்றே நோக்கு வோமாயின், இதை எளிதிற் றெரிந்துகொள்ளலாம்.

பொருட்டிரிபிற் "சார்புபற்றிவிரிதல்" என்னும் துறையை எனது 'சொற்பிறப்பு ஒப்பியலகராதி'யின் ஆரம்பபாகம் பின் வருமாறு விளக்குகின்றது. "சிறப்பியல்புசுட்டி எழுந்த பெயர்கள், அப்பால், அது அது குறிக்கும் பொருளோடு சார்புபூண்ட வேறு பொருள்களுக்கும் பொருந்துவனவாயின. உதாரணம் எழுகின்ற சிறப்பியல்புபற்றிச் சூரியன்பெயராக வந்த எல் எனுஞ்சொல், சார்புபற்றிச் சூரியவெளிச்சத்திற்கும் பெயராயிற்று. இவ் எல் எனும் உருவம் எல்லு எனவும் நின்று, சூரியவெளிச்சம் நிலைபெறும் காலமாகிய நாளுக்குப் பெயராயிற்று. அச்சொல்லினின்று வந்த எல்லை எனும் உருவம் வெளிச்சக்காலத்தின் முடிவாகிய வரம்பைச் சுட்டிற்று. அப்பால், எல்லை எனுஞ்சொல் உறுதிப்பாட்டின் பொருட்டு வேலை எனவும், வேலி எனவும் இரு உருவங்கள் தாங்கி, முறையே வரையறுத்த காலமாகிய நேரத்தையும், இடத்தை வரையறுக்குந்தடையாகிய மதில் ஆதியவற்றையும் குறித்தது. இனி, மதிலின்பெயராகவந்த வேலிச்சொல் அம்மதிலால் உறுங் காவலை யும், அக்காவலினுள் அடங்கிய ஊர் ஆதியவற்றையும் முறைமை யிற் சுட்டுவதாயிற்று. சார்புபற்றி விரிதலாலேதான், ஆதியிற் சடப்பொருள்களுக்குமட்டும் பெயராயிருந்த சொற்கள், பின், சித்துப்பொருள்களுக்கும் அவற்றின் குணம் ஆதியவற்றுக்கும் பெயராயினமையைக் குறித்துக்கொள்க."

இம்முறையிற் கண்டிப்பான ஒருபொருள் முழுதுங் கண்டிப்பாயிராமல், ஏகதேசம் வெளிப்போ நீக்கலோ துளையோ கொண்டதாயிருப்பின் அதற்குப் "பொய்யுள்ளது" என்ற குறிப்புச் சிறப்பியல்பு சுட்டி எழுவதாகும். பொய்யுள்ள சிறப்பியல்பைநோக்கிப் பொளி, பொய்கை, பொக்கை, பொக்கணை, பொந்து ஆதிய வேறு வேறு பொருள்கள் பெயர் அடைந்தன. அப்பால் எண்ணங்களின் நிரையில் பொருத்தமும் அதனுற் பெறப்படும் உறுதிப்பாடுமில்லாமல் ஒட்டையோ நீக்கலோ கொண்ட கூற்றுக்கும் அப்"பொய்"ச்சொல் பெயராயிற்று. பொருத்தமில்லாமல் நிற்பதே பொய் என்பது "பொய்யைச்சொன்னுலும் பொருந்தச்சொல்லவேண்டும்" என்ற பழமொழியிலும் தோற்றுவதைக் காண்க. ஆங்கிலத்தில் Your statement cannot hold water "உன்கூற்றுத் தண்ணீர்கொள்ளாதது" என்று சொல்லுவது இல்லிக்குடத்தின் ஒப்புமையை நோக்கியாம். நீ சொல்லுவது தண்ணீர் நில்லாத ஒட்டைக்குடம்போலாம் என்றபடி. இவ்வாறே, அசத்தியம் எனும் அர்த்தத்தில், "பொய்" என்பது, முழுதும் பொருந்தி உறுதியாய் நிலைபெருமல் நீக்கல் அல்லது ஒட்டைகொண்டது என்று பொருள்படுவதை நுனித்துக்காண்க.

இதற்கு மாறுக, "மெய்" எனும்சொல் நன்ருய்ப்பொருந்திநிற்றலைக்குறிக்கும். முன்காட்டிய மொழிநூல்வல்லுநர் முடிபின்படி, சடப்பொருளான உடம்பு அல்லது உடலையே "மெய்" எனும் பெயரீடு முதலிற் குறித்ததாகவேண்டும். அப்பால், எண்ணங்களின் நிரையிலுள்ள சத்தியம் எனும் அர்த்தம் அதற்குச் சார்புபற்றி வந்ததாகவேண்டும். உடக்குதல்=பொருந்துதல். உடம்பு=பொருந்திநிற்பது. உடலும் அது. இனி, "மெய்" எனும் சொல் ஒன்ருய் "உடக்கிய" உடலுக்கு எவ்வாறு பெயராயிற்று? இவ்வினவுக்கு விடைசொல்லுமுன், "மெய்" எனும் அச்சொல்லின் வரலாற்றை எடுத்தோதுதல் வேண்டப்படும்.

சொற்பிறப்புநூலின்படி, தமிழிற் பலசொற்களுக்கு ஸ்வர பேதம் உண்டு. தொல்காப்பியர் தம் காலத்துக் கவனத்திற்கு உரியனவாய்நின்ற சில பேதங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார் (எழுத்ததிகாரம், 141, 184, உரை). வீரசோழியம் சந்திப்படலம் 4ஐயும் காண்க. இவற்றைத் தவிரப் பல வினைச்சொற்களின் அடியைத் தொடர்ந்துவருகின்ற ஒற்று இரட்டலும் இரட்டாதுநிற்றலும் அச்சொற்களின் ஸ்வரபேதத்தாலேயே என இன்றைக்கு ஆராய்ந்து அறியப்பட்டிருக்கிறது. உதாரணம்: அரிதல் அரித்தல். இவற்றுள் முன்னதில் அகரம் எடுத்தும் பின்னதில் இகரம் படுத்தும் உச்சரிக்கப்படும். ஒருகால் ஒற்றுக்களை இரட்டியாது எழுதி ஸ்வரபேதம் ஒன்றாலேயே அர்த்தவேறுபாடு விளக்கப்பட்டது எனத் தோன்றும் (தமிழ் அமைப்புற்றவரலாறு, பக். 27 காண்க). இனி, படுத்து உச்சரிக்கப்படும் ஓர் அடிச்சொல்லின் தலையுயிர் கெட்டு வருதல் சிறுபான்மை தமிழில் உண்டு. வடமொழியில் பெரும்பான்மை டகர ரகர லகரங்களோடு தொடங்கும் சொற்கள், தமிழில் உயிரோடு தொடங்கி அவ்வுயிருக்குப் பின்வந்த உயிர்மெய்யில் படுத்தலோசைகொண்டிருந்தனவாம். உதாரணம்: தமிழ் இடங்காரம், வடமொழியில் டமருகம்; இதில் தலைஇகரம் கெட்டது. தமிழ் இறங்கு(தல்,) வடமொழி ரஙீ செல்லுதல்; இதிலும், தலை இகரம் கெட்டது. தமிழ் அறு(த்தல்), வடமொழி லூ, வெட்டுதல், தறித்தல். இதில் அகரங் கெட்டது.

இவ்விதியின்படியே அமை(த்தல்) எனும் தமிழ்ச்சொல்லில் ஈற்றுயிர்மெய் படுத்தலோசைகொண்டதாகவே, தலையுயிர் கெட்டு "மை" என நின்று பின் "மெய்" ஆகி, அமைத்தது எனும் பொருள்கொண்டது எனத் தோன்றும். "அமை" எனுஞ்சொல்லின் தலையுயிர் கெட்டவளவில் எஞ்சியபாகம் "மை" என்றமட்டில் நில்லாது, "மெய்" என வருவது எங்ஙனமெனில், ஒருசொல்லில் கெட்ட உயிருக்கு ஈடாக அதன் எஞ்சியபாகத்து உயிர் நீளுதல்

ஒலித்திரிபுவிதிகளால் வேண்டப்படும். இங்ஙனமே இடைகழி (இடைக்கட்டு, வாயில்) எனும் தமிழ்ச்சொல் வடமொழியில் தலையுயிர் கெட்டுவந்தவிடத்து டெஹலீ என நிற்பது காண்க. உள்ளபடி "அமை"ச்சொல்லின் தலையுயிர் கெட்டவுருவம் "மே" என நிற்றலே தகுதி. ஆயின், சொல்லுதற்கெளிதாகும்பொருட்டு "மே" என்பது "மெய்" என வந்ததுபோலும். பரவைவழக்கில் உடம்பைக்குறிக்கும் "மேல்" எனுஞ் சொல் "மெய்" என்ற ஒரு ஆதியுருவத்தின் யகரம் லகரமாய்மாறிய திரிபாயும் இருக்கலாம். "மேல்" எனும் நாடோடிச்சொல் இலக்கியங்களில் 'மேனி' என வரும். இச்சொல்லில் லகரம் தனக்கினமான னகரமாகி இகரக்கடைநிலைபெற்றது போலும். ஆதலால் "மேய்" என நின்றதுதான் "மெய்" என வந்திட்டது என நாம் கொள்ளினும் கொள்ளலாம். எவ்வாற்றானும் "மெய்" எனும் உருவத்துக்கு "அமை" என்பதே அடியெனல் உறுதி.

அமைத்தது, நன்றாய்ப்பொருத்தியது எனும் அர்த்தமுள்ள "மெய்" எனுஞ் சொல் உடம்புக்கு எத்துணை ஏற்புடையது என்பதை அவ்வுடம்பு எனும் சொல்லேபோல அதற்குப் பரியாயமான வேறுசொற்களும் காட்டுகின்றன. இவற்றுள் "யாக்கை" என்பது "யா" எனும் அடியாயுள்ளது. "யா" எனும் அடியோ இயை-த்தல் எனும் சொல்லின் விகாரமாம். இங்கும் தலையுயிர்கெட்டு அக்கேட்டிற்கு ஈடாக 'யை' யானது 'யா' என வந்ததைக் குறித்துக்கொள்க. இயைத்தது (நன்றாய்ப்பொருத்தியது) "யாக்கை"யானதுபோலவே, அமைத்தது (நன்றாய்ப்பொருத்தியது) "மெய்"யாயிற்று எனக் கண்டு இன்புறுக. உடம்பின் மற்றொருநாமம் "புணர்வு." புணர்த்தல் எனும் சொல் பொல்லுதல் பொருத்துதல் எனும் சொற்களோடு அடியொற்றுமைகொண்டிருத்தலால் "புணர்வு" என்பது பொருத்தியது, இயைத்தது, அமைத்தது என அர்த்தம் கொண்டு "மெய்" எனும் சொல்லோடு ஒற்றுமைபூண்டிருத்தலைக்

காண்க. உடம்புக்கு வேறொரு பரியாயம் "பூட்சி." இது புணர்வோடு ஒற்றுமைகொண்டிருத்தல் பார்த்தவுடன் தெற்றெனத் தெளிவாகும். "புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய்" என்ற தேவாரச்சொற்றொடரில் "புணர்த்ததே" (நன்றாய்ப்பொருத்தியதே) "பூட்சி" என்று தொனித்தல் காண்க. இங்ஙனம் யாக்கை ஆதிய சொற்களையொத்த அடிப்பொருள்கொண்டதே "மெய்" எனுஞ்சொல் ஆதலால் உடம்பு எனும் அர்த்தந்தான் அதற்கு ஆதியர்த்தமாதல் வேண்டும் என்பது மீண்டும் ஒருகால் வலியுறுத்தப்படும்.

இனி உடம்பு எனும் அர்த்தம் படைத்த "மெய்ச்"சொல்லிற்கு உண்மை எனும் அர்த்தம் முன் எடுத்துக்காட்டிய "சார்புபற்றிவிரிதல்" எனும் பொருட்டிரிபுமுறையாலே உண்டாயிற்று என்க. நன்றாய்ப்பொருத்தியது மெய்=உடம்பு=யாக்கை=புணர்வு=பூட்சி. இதுதான் சிறப்பியல்புசுட்டிய அர்த்தம். இது முதலாவது. 2. உடம்பின் விசேடபாகமாய் ஒருசார் கருதப்பட்ட மார்பு. 3. உயிரெழுத்துக்கு உடம்புபோலநிற்கும் ஒற்றெழுத்து. 4. உடம்போடு சேர்ந்ததாகிய உணர்ச்சி. 5. உடம்போடு நெருங்கிய உறவுகொண்டதாகிய ஆன்மா. 6. உடம்பைப்போலும் பொருத்தமுள்ளதாகிய உண்மை என்று இப்படியே தமிழகராதி ஒழுங்குமாறிக்காட்டிய அர்த்தங்கள் ஒன்றையொன்று தொடர்ந்து விரியும்.

பொய் பொருத்தமற்றது, நீக்கல் உள்ளது எனவும், மெய் பொருத்தமானது, நன்றாய் அமைக்கப்பட்டது எனவும் வரையறுத்த இவை இரண்டு அத்தியாத்துமபூர்வமான எண்ணங்களுக்கும் ஏற்ற சொற்களை அமைத்துவைத்த நம்முன்னோரது புத்தித் திறமையை எவ்வாறு புகழ்ந்துமுடிப்போம்!

மதிப்புரை

நல்லைவெண்பா:—நல்லையென்பது யாழ்ப்பாணத்திலுள்ள முருகப்பிரான் திருப்பதிகளுளொன்றான நல்லூர் என்பதன் மரூஉ வாகும். அத் தெய்வத் தலத்தைப் புகழ்பொருளாகவைத்துச் சிலேடைநயம் அமையச் செய்யப்பெற்ற வெண்பாக்களாலாகிய பிரபந்தமாகையால் இஃது இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் இற்றைக்கு நூற்றெழுபதாண்டுகளின்முன் விளங்கிய செந்தமிழ்ப் புலவர் சேனாதிராயமுதலியாரென்பார். இந்நூல் 102 செய்யுட்கள் கொண்டது.

இதன் பாடல்கள், யமகம் திரிபுகளோடு பொருந்தி அரிதுணர் வழக்கான சொற்றொடர்களான் அமைந்துள்ளன. ஆகையால் இன்றியமையாத ஒரு குறிப்புரையும் எழுதி, யாழ்ப்பாணத்துப் புலோலிவித்துவான் திரு. க. முருகேசப்பிள்ளையவர்கள் இப்பொழுது இந்நூலினைத் திருத்தமாக அச்சிட்டுள்ளார்கள். இதற்குச் சுருக்கமான ஒரு முகவுரையும் சிறிது விரிவான நூலாசிரியர் வரலாறும் செவ்வனம் எழுதிச்சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றால் ஈழநாட்டுப் பிற தமிழ்ப்புலவர் சிலருடைய வரலாற்றின் அரியசெய்திகளும் அறியலாவன. அன்றியும், இந்நூலினைப் படிப்பார்க்கு இன்பமூட்ட வல்ல சிலேடையுவமையணிநயங்கள் விளங்க விரித்து வரையப் பெற்ற உரையின் திறம் போற்றற்குரியதாம்.

இந்நூலாசிரியரின்வழித்தோன்றிய செந்தமிழ்ச்செல்வர் சிலருடைய நன்கொடையால் இப்புத்தகம் பதிப்பிக்கப்பட்டதென்று தெரிகிறது. இங்ஙனம் தமிழ்வளர்ச்சிகருதி நூலியற்றியும் உரை வரைந்தும் அச்சிற்பதித்தும் அருந்தொண்டுபுரியும் பெருந்தகையாரனைவர்க்கும் தமிழ்மக்கள் நன்றிசெலுத்துங் கடப்பாடுடையர்.

இப்புத்தகத்தின் விலை அணா 8. கிடைக்குமிடம்:—யாழ்ப்பாணச்செந்தமிழ்ப்பதிப்பகம், புலோலி—தெற்கு, பருத்தித்துறை, ஸிலோன்.

ஸ்ரீ:

இராமசெயம்

[இராமாயணத்திருப்புகழ்]

உத்தரகாதை

[இது, இச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ள ஒரே ஏட்டுப் பிரதியிற்கண்டவாறு வெளியிடப்பெறுகிறது. ஏட்டில் இடையிடையே சிதைந்தபகுதி இங்கே புள்ளியிட்டுக் காட்டப்பெற்றுளது. **உதவியாசிரியர்**]

சரு அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

கூரிய பொருளையு ணர்ந்து ணர்ந்து
சீரடி யவரொட ணைந்த ணைந்து
கோயிலின் மருவியு றைந்து றைந்து னடிமீதிற்

கூடிய துளவைய ணிந்த ணிந்து
காவிரி முழுகியெ ழுந்தெ ழுந்து
கூர்புனை நிழலிலி ருந்தி ருந்து சடகோபர்

ஆரண மொழியிலி ருந்து ணர்ந்து
நாளுமொ ரறிகுறி கொண்டு கொண்டு
ளாடிய பகைகளை வென்று வென்று புலன்யாவும்

ஆசற வொருவழி கண்டு கண்டு
நீர்கொடு மலர்கொடு வந்து வந்து
ளாதர வொடுதொழ வென்று மென்றும் அருள்வாயே

தாரணி யினிதுபு ரந்தி ருந்த
நாளிலொர் மறையவன் வந்து நொந்து
சார்வுறு மகனையி ழந்து துன்ப மதனாலே

சாலவு முறையிடல் கண்டி தென்கொல்
நாரத வருள்கென நின்று ணர்ந்து
சாதியின் முறைமைத விர்ந்து சம்பு கரவாளன்

பாரிய கனலிடை நின்று நின்று
மாதவ மொடுவிணு யர்ந்த வண்டர்
பாலுற முயல்குவ னங்க வன்செய் தவம்யாவும்
பாழ்பட முடுகுதி யென்றி யம்ப
மாமறை யவனைய ணைந்தி றந்த
பாலக னுயிர்தரு மஞ்ச லென்ற பெருமாளே. (52)

கரந்து கொண்டும டாததி யற்றியும்
இரந்து நின்றும்வி லாதன விற்றுமெய்
கடிந்து முன்பின டாதத டுத்துந லறம்யாவுங்
கடந்து சென்றுமு ணுதுக ழிப்பவை
பயின்று மந்தணர் வாய்மைபி ழைத்துமெய்
கலந்த நண்பரொ டேபகை பற்றிபு மனைதாதை

வருந்தல் கண்டும்வி டாதன விட்டுமுண்
மருந்து கொண்டட லாழிக ழற்றியும்
மகிழ்ந்த பெண்டிரை வேறுப டுத்தியும் மறுவேத
வரம்ப ழிந்திடு மாறுநி னைத்துமுன்
அரங்க முந்திய கோயிறி ருப்பணி
மயங்க லன்றிவி டாதுந டத்துதல் கடனுமோ

பரந்த விம்பவி மானர தத்திடை
புகுந்த வெங்கட கோடுவ ழிக்கொடு
படர்ந்து பண்பொடு கீழ்த்திசை யுற்றபின் நெடிதேகிப்
பரந்த தென்றிசை யூடொரு பற்ப
தடம்பு குந்தன ஆடுத வத்துறை
பயின்ற சம்புவை வாள்கொடு வெட்டிவிண் ணவர்யாரும்

இருந்த வம்புரி வோருமகிழ்ச்சியின்
வழங்கொ ழுங்கிய பூமழை மொய்த்திட
வெழுந்தி டுஞ்சதுர் வேதமு ழக்குற மறுநீதி
யிலங்கி நின்றுல கேழுநி லைப்புற
நமன்க லங்கின னேடியி ளைத்திட
இறந்தி டுஞ்சிறு வோனையெ ழுப்பிய பெருமாளே. (53)

கும்பிட வோநின்வி யப்புள கோயில்வ
லஞ்செய வோபணி முற்றிட வோமயல்
குன்றிட வோவளே சக்கர மாகிய பொறிதோளிற்
கொண்டிட வோபுக ழத்தனி பாடல்பு
ரிந்திட வோதுள பத்துட னேபயில்
கொந்தலர் மாலைகள் கட்டிட வோவுன தருளேதான்
நம்பிட வோவுயர் பத்தரொ டேதின
மின்புற வோகுரு கைச்சட கோபர்தம்
நன்குண வேலமு ழுக்குற வோபெறு பயனேதோ
நங்களை நீபிற விக்கடை யேவுதல்
வம்பல வோசன னத்துவி டாதினி
நண்பொடு வானதி பற்றிய தாள்பெற அருள்வாயே
சம்புவன் வீடவ கத்திய ளுருறை
யுந்தல மேவிம திப்புட னேயவர்
தந்திடு மாதர மைத்துயர் போனக நகராமேற்
றண்டக பூபதி சுக்கிரன் மாமகள்
மென்சரை பான்மய லுற்றது மேல்விழு
சங்கையி னுன்முனி யிட்டுள சாபமும் அதனாலே
வம்பனு நாடுமி றப்பவ நாள்முதல்
வெம்பிய காணிது முற்கதை யீதென
வண்குட வேதியர் செப்ப விராமுழு தவண்மேவி
வந்துல கேழும்வி யிப்புட னேதொழ
வந்தவி மானர தத்துட னேபெரு
மங்கல மானதி ருப்பதி மேவிய பெருமாளே (54)

காசு தேடுவார் பெண்களொ டேவிளை
யாடி யூடுவார் முன்புள தாகிய
காணி பேணுவார் சந்தன லேபன மலர்மாலை
காத லாகியே யின்புறு வார்மத
யானை யேறுவார் வெம்பரி யானது
காண வூருவா ருண்டிசு காசுக முணர்வாராய்

ஓசை வாரிசூ ழும்புவி யோர்மனம்
வேறு வேறுபோ கும்படி போவது
லோக நீதியாய் நின்றது யானவர் வழிபோகத்

தோரு மேரமா ரங்கவெ ணுவுரை
யாடி நாடினே னிங்கிது வாழ்வுற
வோடு மோவுமோ வென்செயு மோவினி யறியேனே

ராச சூயயா கம்புரி வேனென
நீடு சேடனு ரங்கது நீசெயின்
ராச ராசரை வென்றுகொ டேதினம் வரவேணு

மீது மேன்மையா கும்பரி வேள்வியை
நீசெய் வாயெனு வன்புட னேசொல
வீடில் வீடணே சன்கவி ராசனெ டனுமானுந்

தேச ராசர்யா ரும்பரி வால்வர
வோலை யேவியே பொங்கிய கோமதி
தீர மீதிலே பண்டர்ப ராவுந மிசைமீதே

தீதில் சாலைநீ கண்டிடு வாயென
நேர்வி டாததோர் தம்பியை யேவிய
தேவ தேவனே செந்திரு மேவிய பெருமாளே. (55)

கருமுகி லேசர ணந்தி ருந்திய
சுடர்மணி யேசர ணந்தெ ளிந்திடு
கடலமு தேசர ணஞ்செ ழுந்திரு விளையாடுங்

கமழ்தட மேசர ணந்து லங்கிய
முழுமுத லேசர ணம்ப சுங்குளிர்
கனவரை யேசர ணஞ்ச ரண்சர ணெனவோதி

யுருகுதல் பாடுத னின்றி ரங்குதல்
விழிபுனல் சோருதல்வந்து கும்பிட
லுடன்மிசை யேபுள கஞ்செ றிந்திட னடமாட

லுபயச ரோருக மென்ப தங்களி
னிலமுடி சேரவி முந்தி றைஞ்சுத
லுனதடி யார்களு டன்க லந்திடல் பெறுவேனோ

அரிமக னீலது மிந்த்ர சங்கனெ
டிபனுந ளேசனு மெண்கு மங்கத
னுனுமன்மு னேருமி லங்கை யம்பதி யுடையோனும்
அபயர்ம ராடர்க லிங்கர் வந்திகர்
மகதரி லாடர்தெ லுங்கர் சிங்களர்
அதிர்குரு நாடர்க ளங்கர் வங்கர்க னடர்போசர்
இருளறு கோதமர் வெங்கு றுந்தவர்
எழுவகை மாதரு முந்து மந்தண
ரிமையவர் யாருநி றைந்து தந்தொழின் மிசைகாண
இணையறு வான்மிக னுஞ்செ றிந்திட
முதுபரி வேள்விபு ரிந்த பின்குச
லவர்கதை பாடவு கந்தி ருந்தருள் பெருமாளே. (56)

மூந்திய மூல மென்ப
ரின்புறு சோதி யென்பர்
முன்புள போத மென்பர் வெளியாகி
மொய்ம்புள கோல மென்பர்
அஞ்சன மேனி யென்பர்
முண்டக நாபி யென்பர் மறைநாலும்
தந்திடு நாபி யென்பர்
ஒண்பொரு ளாய தென்பர்
தங்கிய மோன மென்பர் ப்ரபைவீசுந்
தண்சுடர் காணு மென்பர்
அந்தமின் மாய மென்பர்
தந்தெளி வானு னங்கம் அறிவாரார்
அந்தணர் வேணு மென்ற
தண்டொடு மாடை செம்பொன்
அம்புவி யானி னங்கள் பலதானம்
அன்புட னேவ ழங்கி
மைந்தர்கள் காண நண்பின்
அந்தமி லாது யர்ந்த நிதிவீசி

இந்திரை சீதை யிங்கு
வந்திட வேணு முந்த
வென்றநு மேகொ ணர்ந்து முனிபோத
இன்புறு லோச னங்கள்
அங்கவண் மேலெ றிந்த
ரங்கப தீதெய் வங்கள் பெருமாளே. (57)

அந்தமி லாதிக ணத்து
நின்றுல கேழும திக்க
வன்புட னீதிவ ளர்த்து வரவேணும்
அன்றியெ லாரையும் விட்டு
முன்புள பேருமொ ழித்த
வைம்புலன் யாவுமொ டுக்கு துறவாகி

உய்ந்திட வேணுமி தற்கு
ளிங்கடி யேன்முனி ழைத்த
தொன்றுமி லேனலை வுற்று விழலானேன்
உன்பெரு மாயைவி ளைத்த
சம்ப்ரம மானசெ கத்தை
யொண்சுக மோடுக டக்க வசமாமோ

வந்திடு சீதைபு விக்கு
ளன்பொடு நாணியொ ளிக்க
மண்டிய கோபமு திர்ச்சி வரலோடும்
வண்கம லேசனு ணர்த்த
விங்குட னேக்ருபை பற்றி
மங்கைசொ ரூபம்வ குத்த வடிவோடே

வெந்தழல் சேரவ ளர்த்து
முந்திய தேவர்க ளிக்க
விஞ்சிய வாகுதி விட்டு விதியாலே
வென்றிகொள் வேதவ சிட்டர்
மந்திரம் யாவுந டத்த
வெம்பரி வேள்விமு டித்த பெருமாளே. (58)

இருநாலு கோலவெ ழுத்தையும்
ஒருநாள்வி டாமனு ரைத்திட
இருநாலு நாலுபு லப்படு திருநாமம்
எழிலாக மீதுத ரித்திடல்
வளையாழி சேர்பொறி யொற்றிடல்
இசையான தாமரை யிற்படு மணிமாலை
உரமீது தாழவு னக்குள
வனமாலை நீடுசி ரத்துற
வுணர்வோடு நாளுமு னைத்தொழும் அடியார்தம்
உறவேவி டாதுக ருத்துற
அரிகேச வாவென நித்தமும்
உயர்கோயில் கோயிலெ னக்கொடு திரிவேனே
பரிமேத யாகமு டித்தபின்
நகர்மீது மேயபி னைப்பறு
பரிவான கோசலை மிக்கவிண் மிசையேறப்
பகரீம மீதுபு குத்தலும்
மறுதாயி னேடுசு மித்திரை
பரலோக மேகனு மக்கடன் முறைபேணி
அரசான கேகய னைப்பொரு
......நேமிசெ லுத்தலும்
அழகான தோர்பர தற்குநல் விடைபாலித்
தவன்மாம னேடுத னிற்புக
உலகாளும் ராகவ வுத்தம
அபிராம னேயர விற்றுயில் பெருமாளே. (59)

அந்தணர்கள் வேதம னத்தையும்
நன்பொருளி னேடறி யத்தரும்
அங்கரசர் வாகைபெ றத்தரும் வணிகேசர்
அம்பொனிதி வாழ்வையு றத்தரும்
நின்றமரு மேன்மையு றத்தரும்
அஞ்சொன்மட வார்மிகு புத்திரர் பெறுமாறு

தந்திடுமி லாதவ ரெப்படி
சிந்தனைசெய் தாரவை யப்படி
சந்தையமி லாமல ளித்திடும் மலமோனும்

சங்கரனு மாகவ ழுத்திடும்
நின்சரித மோதிநி னைத்திரு
தண்செவியி னூடு நிறைத்திட லரிதேதேர்

கந்திருவ ராசனை முட்டிய
வெம்பரதன் வாகைப டைத்திரு
கண்களனை யாளொரு புட்கர னெனுநாமக்

கந்தனனை யாளொடு தக்கனு
மென்றெளிர்கு மாரரை வைத்தொளிர்
கந்தமுடி சூடல ருட்செய்து நகராகச்

சிந்துவெனு நாடிடை புட்கர
மங்கலசி லாபுர மிப்படி
திண்டிறலி னோடுசெயித்தவ ராசாளச்

சிந்தைமகிழ் வோடுதி ருப்பதி
வந்துதொழு மாபர தற்கிரு
செங்கணரு ளானது வைத்தருள் பெருமாளே. (60)

வாராய்வெளி வந்துநி லாயருள்
கூராயொரு தொண்டுகொ ளாய்பெரு
மாமாயையெ னுங்கரு நீள்வலை யதுபீறி

மாறுபத மென்சிர மீதுற
நேராய்வழி நின்றரு ளாய்மணி
வாயூடுமி ருந்துத வாயென தளமீதிற்

சேராயிரு கண்க்ருபை யேகொடு
பாராய்தொட ரும்பல தீவினை
தீராய்நினை யுந்தொறு மூறிடும் அமுதாகி

............பருங்கனி யாயொளி
தானுகியி ரண்டற வேயொரு
சீராகிநி றைந்துவி டாயினி அமையாதோ

பேராண்மையு றங்கலி லாதவர்
சேயாகிய வங்கத னுரொடு
பேராகிய சந்திர கேதுவொ டிருவோரும்
பேராமகு டந்தலை சூடியொர்
காராவத மென்றுரை யேபெறு
பேணுர்பர வுந்திரு நாடதி லினிதேகிக்
காரார்பதி யென்பதொ ரூர்தனை
நேரேமுதல் வன்பெற நீடிய
கானுர்பொழி லிந்திர மாநகர் பதியாகக்
கார்போலிள மைந்தனும் வாழ்வுற
நாடாளுமு குந்தநி சாசரர்
காலாரெகு நந்தன னேசுரர் பெருமாளே. (61)

மூலைகுடி பால னுயர்கந்த ரூபன்
வனிதையர் நாண விளமைந்தர் தாதை
முதுநறை யாளி கிழவன்கை காலும் உதவாதான்
முறைபிறழ் வாயன் வயனந்த்ரி தோஷன்
விழுபிணி யாள னெனவிஞ்சு நாம
மொழிசெய லான செனனங்க ளூடு தடுமாறி
அலைவுறு பாவி வெகுதொந்த மான
வினைகளை நூறி யுனதன்ப னுகி
யடியவர் மேவு சபையின்கண் மேவி ரகுநாதா
அரிகரி ராம வரிரங்க தேவ
செயசெய வாழி யெனநின்று பாடி
அழிவறு வான நதிகொண்ட தாள்கள் அடைவேனே
உலகது காவல் புரிகின்ற நாளின்
முனியுரு வாகி நமன்வந்து மேவி
யொருமொழி கூற நடுவிங்கொர் பூதர் வரிலோநின்
உயிர்கொடு போவ னெனவன்று சேடன்
மனைவழி காவன் மிசைநின்ற போதில்
உறுதுரு வாசன் வரல்கண்டு போக விடலோடும்

வலிகொடு சீறி நமனுந்த னுவி
தருகென லோடு முறையென்று சேடன்
மறைகளும் யாரு மிடரின்கண் மூழ்க இருபாதம்
வான்முறை சூடி யுடனும்பர் பேணு
சரயுவின் மூழ்கி யுயர்கின்ற லோக
மருவுறு நீதி நெறிகண்ட தேவர் பெருமாளே. (62)

தலைப்பொறிவி ரிந்த நோயை
யகற்றிடும ருந்து பாவை
தவத்துறைபெ ருந்தி யானம் அனபானங்
தனிப்பொருளு கந்த பாடல்
வழித்துணைப யந்து ளோர்கள்
தமக்குமவை குந்த மேற விடுமேனி

நிலைச்சுருதி மந்த்ர மாலை
மொழிக்குமுத லின்ப ஞான
நினைத்தவைய டங்க ராம எனவோதும்
நினக்குரிய தஞ்ச மான
எழுத்திவையி ரண்ட லாது
நிலத்தினுள தென்று வேறு கருதேனே

இலக்குவன்வை குந்த மேற
மலக்கமொடு நின்று மாழ்கி
.........யம்பொன் மௌலி புனையாமல்
எடுத்தகுச னன்பி னேடு
குசப்பதியி ருந்து வாழ்க
லவக்குரிசி லுஞ்சி ராம பதிமேவ

வலத்துலவ ணன்ற னுவி
பறித்ததொரு தம்பி தானும்
மதிப்புடைய மைந்தர் சீ......... திகையூரின்
மகிழ்ச்சியின்வி ளங்க நீடு
திருப்பதியில் வந்து கூடி
வணக்கமுற நின்ற தேவர் பெருமாளே. (63)

கருக்குழியி லேவி டாது
விடுப்பினும்வி டாத டாது
காத்தலில னாக நாலு மறையோதுங்
கனத்தகுல தீர னாக
வுனக்கடிமை யாக நீடு
கலைத்தமிழ்வி நோத னாக வுயிர்யாவும்
புரக்குநெறி யாள னாக
அருட்சூரிய னாக மேனி
புலப்படுசொ ரூப னாக நிலையான
புகழ்த்தரும சீல னாக
வனைத்துநெடு வாழ்வு பேறு
புவிக்குளுடையோனு மாக அருள்வாயே
குரக்கரசு வீர ரோடும்
அரக்கர்பதி யோடு நீடு
குலப்பதியின் மீது போத அருளாலே
கொடுத்தவர மாறொ ணாமெ
யரக்கர்பதி யோடு நீடு
குறித்தவநு மானு மேகு மெனவேதான்
இரக்கமுட னாணை கூறி
யகற்றியபின் வான ரேசர்
இயற்குகனெ லோரும் வீறு பதியோரும்
இருக்குமிளை யோரு மேவி
யடுத்துவர வாற தான
எழிற்சரயு மீதி லாடு பெருமாளே. (64)

மாதாவு மென்றாதை யும்பி தாமக
ரானோரி றந்தோரு மென்செய் தேகினும்
மாறாது நின்பாதம் வந்து பேணவென் வழியானோர்
வாழ்வோடி ருந்தேய நந்த மாயவர்
கால்கால்வ ளர்ந்தேறி யன்ப ராகியுன்
மாகோயி லுஞ்சேவை யுங்கை யாளுக அடியேனும்

போதாக டங்தேதெ ளிந்து நீள்புலன்
நேரேக லங்கா துணர்ந்தொ ரூர்வழி
போவார்தி றம்போல மைந்த யோகமொ டுனதான

பூவார்ப தம்பார ளந்த நீள்கழல்
வாறுறு வங்தேபி றந்த காலிரு
பூமாத ரும்பாணி கொண்ட சேவடி அடைவேனே

வேதாவெ திர்ந்தேப ணிந்து தேவநின்
மாரூப மின்றேகொ ளென்ற போதினில்
வேரூன சங்காழி யங்கை மேலுற மணிமார்ப

மீதேசெ ழும்பூம டங்தை வாழ்வுற
நால்வேத முஞ்சூழ வந்து தாடொழ
வீறுக நின்றேபின் வந்த வானரர் சுரராக

வீதாநின் முன்பாக வந்த வூர்வர
மேலான தந்தான மென்றெ ரூர்புக
யாகேச னுந்தேவ ரும்பு ராரியு மலரோனும்

ஈடேறி யன்பா...........வாழ்வுற
மீளாக லஞ்சேர்வை குந்த மேறிய
ராமாவ ரங்காவ நந்த வானவர் பெருமாளே. (65)

உத்தரகாதை முற்றும்

கஈசுயஎ-ஞ அற்பசிமாதம் பதினைந்தாந்தெய்தி திரவாரமும் துதிகையும் அநுஷநக்ஷத்திரமும் பெற்ற சுபதினத்தில் இராமசெயத்திருப்புகழ் குறையுமெழுதி முற்றியது. இராமன்றிருவடிகளே சரணம். கருடாயநம:

சென்னை விவசாய வித்தியாசாலை ஆசிரியர்

கிருஷ்ணன் மீனன்

நினைவுக்குறிப்பு

[ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியார் G.B.V.C.]

முன்னுரை

இவர் சென்னை (சைதாப்பேட்டை) விவசாய வித்தியாசாலையில் 1881—1884 வருஷங்களில் என்னுடன் படித்தவர்; பின்பு அதே விவசாயவித்தியாசாலையில் விவசாய ஆசிரியராயிருந்தார். நான் மிருகவைத்திய இலாகா இன்ஸ்பெக்டராக இருந்தபோது, சென்னைநகரிலேனும் செங்கற்பட்டுச்சில்லாவிலேனும் வேலைபார்க்க நேர்ந்தகாலங்களில், இவரை அடிக்கடி கண்டு சல்லாபித்து அளவளாவி இனிது பொழுதுபோக்கும் சமயங்கள் நிரம்ப வாய்த்திருந்தன. அச்சமயங்களில், எங்களுடன் கூடவிருந்து குதூகலமடைந்தவர், சென்னையிற் சிலகாலமும் நெல்லையில் நெடுங்காலமும் பிரபல வைத்தியராயிருந்த டாக்டர். A. Y. நாராயணையர் L M & S. மீனனுக்கு எங்களிருவரினும் நெருங்கிய நெடுங்காலநேயர் யாரும் மலையாளிகளல்லாதாருள் இருந்ததில்லை. இதிற் கூறப்படும் நிகழ்ச்சிகள் சில யான் நேரில் அறிந்தவையும், பல நாராயணையர் சொல்லக் கேட்டவையுமாம்.

விவசாய வித்தியாசாலை

விவசாயவித்தியாசாலையிற் சேருதற்குமுன் பல்கலைக்கழகச் சார்புடைய கலாசாலை (Arts Colleges) களில் மீனனும் யானும் சில வருஷங்கள் படித்திருந்தோம். ஆதலால், அந்தக் கலாசாலைகளுக்கும் விவசாயவித்தியாசாலைக்கும் உள்ள வித்தியாசங்களைப்பற்றி உணரவும் கலந்துபேசவும் அடிக்கடி நேர்ந்தது. நாங்கள் பேசிக்கொண்டதன்சாரம் பின்வருவது:—

கலாசாலை (Arts College) களில் உள்ளப்பயிற்சியன்றி உடற்பயிற்சி ஒருசிறிதும் இருந்ததில்லை. விவசாய வித்தியாசாலையிலோ, இருவகைப்பயிற்சிகளையும் ஒருங்குபெறுகின்றோம். அங்கே, உடற்பயிற்சிவித்தைப்போதகரோ (Gymnastic teacher), உடற்பயிற்சியோ, சிலம்பப்பயிற்சியோ, பாட்மின்டன் (Badminton) டென்னிஸ் (Tennis) கிரிக்கெட்டு (Cricket) என்ற விளையாட்டுக்களோ, அந்த

விளையாட்டு நிகழும் அரங்குகளோ கிடையா. இங்கே, அவை யெல்லாமிருப்பதல்லாமல் தோணியும் தோணிகடாவுதற்பயிற்சியும் (Boat rowing) உண்டு.*

நாள்தோறும் கலப்பைபிடித்துழுதல் முதலிய உடலுக்கு உழைப்பான விவசாயவேலைகளைச் செய்பவர்களாயுள்ள மாண வர்க்கே மேற்கூறிய சிலம்பப்பயிற்சி முதலியவை அவசியமென்று நம்முடைய பிரின்சிபால் (Mr. W. R. Robertson) அவைகளுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் திறம்படச் செய்திருக்கிறார். அப்படியிருக்க, மற்றக் கலாசாலைப் பிரின்சிபால்கள், முழுஉழைப்பும் மூளைஉழைப்பாயுள்ள மாணவர்களுக்குத் தேகப்பயிற்சிக்குரிய யாதொன்றும் செய்யாதிருப்பதேனோ? அங்கே, மாணவர்கள் வசிப் பதற்குக் கலாசாலையைச்சேர்ந்த கட்டடங்கள் கிடையா. இங்கே, அவைகள் சிறப்பாக உள்ளன. அங்கே, ஒவ்வொருவகுப்பிலும் நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் இருக்கிறார்கள். இங்கே, இருபதுக்கதிகமாக எந்தவகுப்பிலும் இல்லை. அங்கே, மிகமிகப் பலர் பரீக்ஷையில் தேறுவோமோ தவறுவோமோ என்று சதா கவலை குடிகொண்ட நெஞ்சினராயிருக்கிறார்கள். இங்கே, அத்தகையோர் மிகமிகச் சிலரே. அங்கே சனசாரச் சீர்திருத்தங்களைப் (Social reforms) பற்றித் தீவிரமாகப் பேசுவார்கள்; கலாசாலையைச்சார்ந்த சிற்றுண்டியறங்கில் (Tiffin rooms) ஒருவரையொருவர் பாராது நவக்கிரகங்கள் வக்கிரித்தாற்போலிருந்து சாப்பிடுவார்கள். இங்கே, சமபந்திபோசனம் (Casmopolitan mess) சர்வசாதாரணம்.

உருவின்சிறுமையும் அறிவின்பெருமையும்

விவசாயவித்தியாசலையில் மூன்றுவகுப்புக்கள் இருந்தன. அவைகளில்படித்த மொத்தமாணவர் ஐம்பதுக்குமேற்பட்டவரெல் லாரினும் இவர் உருவிற் சிறியவராயிருந்தார். இவர் தேகநிறை தொண்ணூற்றெட்டுராத்தலாயிருந்ததாக ஞாபகமிருக்கிறது.

---

* விவசாயவித்தியாசாலைக்கு அருகேயுள்ள அடையாற்றின்கரையில் மாணுக்கருக்கு ஒரு தோணி இருந்தது. அதில் அவர்கள் அந்த ஆற்றில் படகோட்டுவது நிகழ்ந்துவந்தது. அந்தத் தோணிஓட்டுவதுசம்பந்தமாகநிகழ்ந்த விசேடசம்பவங்கள் இந்த நினைவுக்குறிப்பிற் பின்பு விவரிக்கப்படும்.

ஒருமாணவர் இருநூற்றெட்டுராத்தல்நிறையுடையராயிருந்ததும் நினைவுக்குவருகிறது. இவர் உருவில் எல்லாரினும் சிறியரா யிருந்ததற்கெதிராக, அறிவில் எல்லாரினும் பெரியராயிருந்தார்.

சுயமரியாதை

விவசாயவித்தியாசாலை ஆசிரியருள் ஐரோப்பிய ஆசிரியர் ஒருவர், கோவிலிலுள்ள விக்கிரகங்கள் கும்பிடுவார்க்கு எதிர் கும்பிடலாவது தலையசைத்தலாவது செய்யாததுபோல, சலாம் செய்யும்மாணவர்க்குத் திரும்பச்சலாஞ்செய்தல்கிடக்க, தலையசைத் தல்கூடச் செய்யாதிருந்தார். அவர், ஒருநாள் காலையில் வித்தியா சாலைக்கு வந்தார். அப்போது, அவரவர்வகுப்புக்குப் போக வந்த பலவகுப்புமாணவர்கள், வித்தியாசாலையின் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தனர். அவர்களெல்லாரும் மேற்கூறிய ஆசிரியரைக் கண்டு வந்தனஞ்செய்தனர். இவர்மட்டும் சும்மாநின்றூர். ஆசிரியர், 'நீயேன் சலாஞ்செய்யவில்லை?' என்றவுடனே, இவர், 'முன் நான் சலாஞ்செய்தகாலங்களில் நீங்கள் திரும்பச் சலாஞ்செய்யவில்லை. தலையசைக்கக்கூடவில்லை.* ஆதலால் உங்களுக்கு நான் சலாஞ் செய்வதை நிறுத்திவிட்டேன்' என்றூர். அதன்பின் அந்த ஆசிரியர், திரும்பச் சலாம்செய்யும் மரியாதையை அநுசரிப்பா ராஞர்.

இங்கிலாந்துவாசம்

இவர், சென்னை விவசாயவித்தியாசாலைப் படிப்புமுடிந்தபின் இங்கிலாந்துக்குச்சென்று, அங்கேயுள்ள விவசாயவித்தியாசாலை யொன்றிற் படித்துத்தேறிஞல், சென்னைமாகாண விவசாய இலாகா வில் உயர்தர உத்தியோகம் பெறலாமென்று இங்கிலாந்துக்குப்

---

* இது, இடைக்காடர் தம்மை அசட்டைசெய்த பாண்டியனைப்பற்றி மதுரைக்கோயிலிற் சொக்கநாதசுவாமிமுன்பு முறையிட்டதாகக்கூறும் திருவிளையாடற்புராணப்பாட்டை நினைவுறுத்துகிறது. அப்பாட்டு வருமாறு:—

'பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க் ககமகிழ்ந்தோர் பயனு நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே யடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பாரைமர நிரையேவான் ருேடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாயகொடுஞ்சுரமேயெனவிவற்ருேரஃறிணையொத்திருந்தான்மன்னே.'

போகவிரும்பினர். அதற்கு வேண்டியபொருள் தம்மிடமில்லாமையால், தம் உறவினருள்ளும் நண்பினருள்ளும் செல்வராயிருந்தவர் பாற் பொருளுதவிபெற்று இங்கிலாந்துக்குப் போனர். அங்கே, ஒரு விவசாயவித்தியாசாலைப் பிரதமாசிரியரைக்கண்டு தாம் அந்த வித்தியாசாலையிற் படிக்கவிரும்புவதாகவும், தாம் சென்னை விவசாய வித்தியாசாலையில் மூன்றுவருடம்படித்துத் தேறியிருப்பதனல், ஒருவருடமட்டும் படித்து, அவ்வித்தியாசாலை முடிவுப்பரீக்ஷையில் தம்மைச்சோதித்துத் தாம் சித்திபெற்றுல் அவ்வித்தியாசாலைப் பட்டதாரியாக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அந்த வித்தியாசாலைப் பிரதமாசிரியர், ஏற்பட்ட வருஷங்களில் ஒருவருடங்கூடக் குறைக்கமுடியாதென்றுகூறிவிட்டார். இவர், அவ்வளவு காலம்படிக்கப் பணமேயன்றி மனமுமில்லாமையால் இங்கிலாந்தில் விவசாயப்படிப்பெண்ணத்தை விட்டுவிட்டார். செலவானது போக மிஞ்சியபணம் இந்தியாவுக்குத் திரும்புவதற்குப் போதாததாயிருந்தது. இந்தநிலைமையில், பத்திரிகைகளுக்கு விஷயங்களெழுதியனுப்பிப் பணம்சம்பாதிக்கலாமென்ற எண்ணந்தோன்ற, "இந்தியவிவசாயம்" என்ற தலைப்பின்கீழ்ப் பலகட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பலானர். இவர், எதிர்பார்த்ததற்கு மிகவும் அதிகமாகப் பத்திராதிபர்கள் பிரதிபலனளிப்பாராய் ஏராளமான பணமனுப்பினர்கள். இவரைப் பலவருடங்கள் படிக்கவேண்டுமென்ற பள்ளிக்கூடத்தாசிரியரே, இவர் கட்டுரைகளைக்கண்டு மிகவும் நன்குமதித்து, இவரைத் தம் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துத் தம் மாணவர்க்குப் பிரசங்கங்கள்செய்ய வேண்டிக்கொண்டார்.

எத்தரை எத்தல்

இவர், ஒருநாள் லண்டன்நகரில் ஒரு நாவிதர்சாலைக்குப்போய்ச் சவரஞ்செய்வித்துக்கொண்டபின், நாவிதன் வேலைத்தொடக்கத்திற் கேட்ட சவரக்கூலியை மேசைமேல் வைத்துவிட்டுத் தம் கைத்தடியை எடுத்துக்கொண்டு புறப்படலானர். சவரஞ்செய்தவன், இவரைத் தடுத்துச் 'சவரக்கூலி ஒரு கிரௌன் (அஞ்சுஷில்லிங்), ஒரு ஷில்லிங்கல்ல' என்றுன். அதற்குள் அந்தச்சாலையிலிருந்த மற்றவர்களும் வந்து இவரை வளைந்து மறித்தனர். இவர், அவர்கள் எத்திப்பறிப்போர் (Swindlers) என்று தெரிந்து ஒருகணமும் தாமதியாமல், அவர்கள் இவர் என்னசெய்வாரென்று

நினைப்பதற்குமுன் அவர்களைத் தம் கைத்தடிகொண்டு மாறிமாறி நையப்புடைத்துக் 'குய்யோ முறையோ! கூவே கூ!! கொள்ளை கொள்ளை !!! என்ற பொருள்பட (ஆங்கில)க் கூக்குரலிட்டனர். உடனே தெருவில்நின்ற போலீசுச்சேவகர்வந்து விசாரித்து அந்தச் சவரச்சாலைக்காரர்மேற் குற்றஞ்சுமத்தி மாஜிஸ்டிரேட்டு முன் கொண்டுபோய்விட்டார்கள். போலீசார் முன்னமே நெடுங் காலமாக அந்தச் சாலைக்காரர் எத்திப்பறிப்போரென்று தெரிந் திருந்தார்கள். பறிகொடுத்த யாரொருவரும் தம்மிடம் ஆவலாதி சொல்லாமையால், அச்சாலைக்காரரைத் தண்டனைக்குக்கொண்டு வரக்கூடாதிருந்தனர். ஆயினும், யாரேனும் குறைகூறினல், பிராது நடத்தக்கருதி அதற்கு உதவியாமென்று முன் எத்திப்பறிக்கப் பட்டவர்கள் பெயர்களையும் விலாசங்களையும் குறித்துவைத்திருந் தனர். ஏமாறிப் பறிகொடுத்தவர்களுள்ளே சிலர், அற்பத்தொகைக் காகக் கலகஞ்செய்வது அகௌரவமென்று சாலைக்காரர் கேட்ட தைக் கொடுத்துவிட்டுப்போன அந்தஸ்துடைய பெரியமனிதரா யிருந்தனர். போலீசார் இவரோடு அவர்களையும் மாஜிஸ்டிரேட்டு விசாரிக்கும்படிசெய்தனர். மாஜிஸ்ட்ரேட்டு, அந்தப் பெரியமனிதரை நோக்கி 'இந்தச் சிறிய இந்தியருடைய தீரமும் குற்றவாளிகளைத் தெண்டனைக்குள்ளாக்கும் கடமையைச்செய்யும் மனவுறுதியும் ஐரோப்பியராகிய உங்களுக்கு இல்லாமற்போனது, ஒருபுறம் விசனத்தையும் ஒருபுறம் நகைப்பையும் உண்டாக்குகிறது' என்று கூறி, இவரை எத்திப்பறிக்கமுயன்ற சவரச்சாலைக்காரருக்குத் தக்க தண்டம் விதித்தார். இயல்பாகச் சிற்றுருவினரான இவரை மிகவும் சிறுத்துக் குறுகிய வாமனர்போலவும் பேருருவமுடைய சவரச்சாலைக்காரரை மிக்க பெருங்காத்திரமுடைய ராட்சசர்போல வும் இவர் கைத்தடியைப் பனைபோலவும் இவர் அவர்களைப் பனை கொண்டு தாக்குவதுபோலவும் காட்டும் சித்திரப்படத்துடன் இந்தப் புதுமையான செய்தியை நகைச்சுவைகொழிக்க எழுதிப் பத்திரிகைகள் பரப்புவனவாயின.

சென்னைக்குத்திரும்பியதும் விவசாய ஆசிரியரானதும்

இச்செய்தி பரவியபின், இவர் மிகப் பிரபலரானார். இவர் எழு துங்கட்டுரைகளுக்கு முன்னினும் அதிகமான மதிப்பும் வெகுமான மும் கிடைக்கலாயின. அப்படித் திரண்டபணத்திற் செலவானது

போக, இந்தியாவுக்குத் திரும்புதற்குப் போதியபணம் மிஞ்சிய போது, இவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்து தாம் மாணவராயிருந்த சென்னை (சைதாப்பேட்டை) விவசாய வித்தியாசாலையில் விவசாய ஆசிரியாராக நியமிக்கப்பெற்றார்.

அடையாற்றுச் சம்பவங்கள்

சைதாப்பேட்டைக் கவர்ன்மென்றுபாரம் (Form-விவசாயப் பண்ணைத்தலம்) அடையாற்றங்கரையிலிருந்தது. அந்தப்பாரத்தில் விவசாயமாணவர் வசிக்கும் குடிசைகள் (Cottages) பல இருந்தன. அவைகளில் வசித்த மாணவர்களும் பாரத்துக்கு வெளியே வசித்த மாணவர்களும் அடையாற்றில் போக்குவரத்துச்செய்ய, ஒரு தோணி இருந்தது. அந்தத் தோணியிற் சில மாணவர்கள் செல்லும்போது, அவர்களுக்கும் எதிரேவந்த அடையாற்றுக் கிளப்பைச் (Adaiyar club) சேர்ந்த தோணியிலிருந்த ஐரோப்பியர்களுக்கும் ஏதோ சில ஏதுவால் மனத்தாபம் நேர்ந்தது. சொற்பத் தொகையினராயிருந்த மாணவரைப் பெருந்தொகையினராயிருந்த ஐரோப்பியர் அடித்துத் துன்பப்படுத்திவிட்டார்கள். இந்த விசனகரமான சம்பவத்தைப்பற்றி மாணவர்கள் கூடி ஆலோசித்தார்கள். அந்த ஆலோசனையில் முடிவுசெய்தபடி, தங்கள் 'பிரின்ஸிபா'லிடம் நடந்ததைத் தெரிவித்து அவர் அநுமதிபெற்றுத் துன்புறுத்திய ஐரோப்பியர்மீது கிரிமினல் நடவடிக்கை நடத்தத் தீர்மானித்தார்கள். இந்த விவரங்கள் தமக்குத் தெரியவந்தபோது, நம் மீனன் மாணவர்களை அழைத்து 'நீங்கள் தீர்மானித்தபடி செய்யாதீர்கள். ஐரோப்பியரான பிரின்ஸிபால் ஐரோப்பியரைப் பாதிக்கும்படியான அநுமதியை அளியார். அளித்து நீங்கள் வழக்குத்தொடர்ந்தாலும், செயமடைவது சந்தேகம். இப்பொழுது பொறுத்துக் கொண்டிருங்கள். முன் துன்பப்படுத்திய ஐரோப்பியர் திரும்பத் தோணியில் எப்போதாவது வரும் சமயத்தை எதிர்பார்த்திருந்து, நீங்கள் பெருங்கூட்டமாகச்சென்று அவர்கள் செய்ததற்குப் பதில் செய்துவிடுங்கள்' என்றார். மாணவர்கள் அவ்வாறு செய்திட்டார்கள். பெரிய உத்தியோகஸ்தர்களும் பெருத்த வியாபாரிகளுமான அந்த ஐரோப்பியர் சிறிய இந்தியமாணவர்களால் தாங்கள் அடைந்த அவமானத்தைப்பற்றிப் பிராதுசெய்து பகிரங்கப்படுத்தமாட்டார்களென்று கருதியே மீனன் மாணவர்களுக்கு மேற்கூறியவாறு புத்திமதி கூறினார். அவர் கருதியபடியே பிராது செய்யப்படவில்லை.

மூன்றும்வகுப்புவண்டியின் உட்புறம் பார்த்தறியேன்

ஒவ்வொருவருடத்திலும் சிலகாலம் இவர் தம்முடைய மாணவர்களைக் கூட்டிக்கொண்டு வெளியிடங்களுக்குச்சென்று அங்கங்கேயுள்ள பயிர்வகைகளையும் பயிரிடும்முறைகளையும்பற்றி அறிவூட்டுவதுண்டு. அப்படி வெளியேசென்று திரும்பிய ஒருசமயத்தில், பிரின்ஸிபாலானவர், சில உத்தியோகஸ்தர்கள் ரயிலில் தாழ்ந்த வகுப்புவண்டியில் பிரயாணஞ்செய்து உயர்ந்தவகுப்புப்படி வாங்குவதை மனத்துள்வைத்துக்கொண்டு, இவரைநோக்கி 'நீர் மூன்றும் வகுப்பிற்சென்று இரண்டாம்வகுப்புப்படிவாங்கி, இப்போது போய் வந்த பயணத்தில் மிக்க லாபம் அடைந்திருப்பீரே' என்று வேடிக்கையாகக் கேட்டார். இவர் "நான் ஆசிரியன் ஆனபின் மூன்றும் வகுப்பு வண்டியின் உட்புறம் பார்த்தறியேன்" என விடையளித்தார்.

வைத்தியசோதனையினின்று வைத்தியமுறையினுல் தப்பியது

நான் மிருகவைத்திய இலாகா உத்தியோகத்தனுயிருந்தபோது ஒருநாள், கோயமுத்தூருக்குப்போவதற்காகத் திருப்பூர் ஸ்டேஷனில் ஓர் இரண்டாம்வகுப்புவண்டியில் ஏறப்போனேன், அப்போது. அதில் திரளான வாலிபர்கள் இருந்தார்கள். அவர்கள் 'இவ்வண்டி "ரிசர்வ்" செய்யப்பட்டிருக்கிறது. வேறுவண்டிக்குப் போங்கள்' என்றுர்கள். நான் வேறுவண்டிக்குப் போகப் புறப்பட்டபோது, அம்மாணவர்களைக் கோயமுத்தூர்ஜில்லாவில்வழங்கும் விவசாயமுறைகளைக் காட்டக் கூட்டிக்கொண்டுபோகும் ஆசிரியர் கிருஷ்ணன்மீனன் என்னைக்கண்டு, எழுந்துவந்து 'முதலியாருக்கு "ரிசர்வ்" இல்லை' என்று சொல்லி, என் கையைப்பிடித்துக்கொண்டு போய்த் தம்பக்கத்தில் இருக்கச்செய்தார். சில ரயில்நிலையங்கள் (Ry. Stations.) கழிந்தபோது, என்னைத் தன்கையைப் பிடித்துப் பார்க்கச்சொன்னுர். அவ்வாறுசெய்து, "சூடு அதிகமாயிருக்கிறதே, போத்தனூர் ரயில்நிலையத்தில் பிளேக்குவைத்தியர்கள் உம்மைத் தடைப்படுத்திவிடுவார்களே, இத்தனை மாணவர்களோடு நீர் வந்த காரியம் நிறைவேருதே' என்றேன். 'நான் பிளேக்கில்லாத இடத்திலிருந்துவருகிறேன். இந்தச்சூடு பிளேக்குக்காய்ச்சலின் சூடல்ல. சில வேளைகளில் பலவீனத்தினுல் எனக்குக் காய்ச்சல்வருவதுண்டு. அது இது' என்றுர். 'எந்தக்காரணத்தால் ஏற்பட்ட சூடானுலும் உம்மைக் 'குவாரன்டை'னில் (Quarantine) வைத்துவிடுவார்கள்' என்றேன்.

இதற்குள், போத்தனூர் ரயில்நிலையத்துக்கு வந்துசேர்ந்துவிட்டோம். பிளேக்குவைத்தியத்தலைவர், நாங்களிருந்த வண்டிக்குள் வந்து, ஒவ்வொருவரையும் கையைப்பிடித்துப்பார்த்து மீனனை மட்டும் கூட்டிக்கொண்டுபோனார். நாங்கள் எல்லோரும் அவர்கள் பின் சென்றோம். வைத்தியத்தலைவர் மீனனை ஒரு நாற்காலியில் இருக்கச்செய்து, தம் உதவிவைத்தியரைக்கொண்டு சோதிக்கச் சொல்லிவிட்டுப்போனார். உதவிவைத்தியர் சூடறிகருவியை இவர் கக்கத்தில்வைக்கப்போனபோது, இவர் 'நானே வைத்துக்கொள்கிறே'னென்று வைத்துக்கொண்டார். அவ்வுதவிவைத்தியர் வேறு பிரயாணிகளைச் சோதிக்கச்சென்றார். சிறிதுநேரஞ்சென்றபின் வந்து, இவர் கக்கத்தில் வைத்திருந்த சூடறிகருவியையெடுத்துப் பார்த்து அக்கருவி சரியாய் வைக்கப்படவில்லையென்றார். அப்போது, வைத்தியத்தலைவர் வந்தார். நடந்ததை உதவிவைத்தியர் சொல்லக்கேட்டபின், அவர் தாமே சூடறிகருவியை இவர் கக்கத்தில்வைத்துப் போதியநேரஞ்சென்றபின் எடுத்துப்பார்த்துக் 'காய்ச்சல் இல்லை. இஷ்டமான இடத்துக்குப் போகலாம்' என்று சொல்லிப் போய்விட்டார். நான் இவர்காய்ச்சல் எப்படி நீங்கியதென்று விசாரித்தபோது, இவர் சூடறிகருவியைத் தம் கக்கத்தில்வைத்தபோது, தம் உடம்புச்சூடு அதிலே ஏறாதவிதமாக வைத்துக்கொண்டாரென்றும் உதவிவைத்தியர் சூடறிகருவியைக் கொடுத்ததற்கும் பெரியவைத்தியர் திரும்பிவந்துபார்த்ததற்கும் இடையில் காய்ச்சல்வந்தவேளைகளில் உபயோகித்தற்காகத் தம் கைவசம் வைத்திருந்த காய்ச்சல்மாத்திரையை உட்கொண்ட தந்திரத்தினால் தேகச்சூட்டைத் தணித்துக்கொண்டாரென்றும் தெரிந்தேன்.

கோயமுத்தூர்ஜில்லாவில் பலநாள் தங்கித் தம்முடன் கூட்டிவந்த திரளான மாணவர்களுக்குக் காட்டவேண்டிய விவசாயக் காட்சிகளைக் காட்டவும் அவர்கள் கண்டவைகளைப்பற்றிக் கற்கவேண்டியவைகளை அவர்களுக்குக் கற்பிக்கவும் செய்த நற்காரியம், மேற்கூறிய தந்திரஞ்செய்யாதிருந்தால் முடிந்திராது.

480-481 இரண்டும் ஒருவினைகொண்டு முடிவன. குருகைநகரவேதியரால் வேதங்கூறுமாற்றாலுண்டாக்கப்பட்ட அக்கினியானது, ஊழிக்காற்றாலும் பிரளயவெள்ளத்தாலும் அவியாது ஒளிவிட்டு விளங்குகிறது. 'கடுங்காற்றாலும் கடியநீராலும் அவியக்கூடிய அக்கினி, அவியாதிருப்பது, திருமால் குருகாபுரிக்கு அருளியதுபோல என்றும் அழியாதிருக்குந்நிலையை இதற்கும் அருளியதாலோ அன்றித்திருமந்திரம் (இதற்கு) அருளிய மேன்மையாலோ? அன்றிக் காற்று, (தன்னிடமிருந்து தோன்றியமையால்) தன் குழவியாயுள்ள நெருப்பை அவிப்பது இயல்பன்றெனவெண்ணியதாலோ? அன்றி, நீர், (தான் நெருப்பினின்று தோன்றினமையால்) தனக்குத் தாயான நெருப்பைப் பாதுகாவாது அவிப்பது, தணியாத சினத்தை விளைக்குமென்று எண்ணி, அழியாது நிலைநிறுத்தியமையாலோ? அன்றி, வானுலகத்தாரும் வணங்கும் பெருமையுடைய முனிவர்களுக்கு அவருடைய கண்மணிபோல் அருமையுடையரான வேதியர்செய்த தவவலியாலோ? (இவற்றுள்) எதனாலென்று தெரிந்ததில்லை'யென்று கவி அதிசயித்துக்கூறியபடி.

482 நாமம் - அச்சம். வாமனன் - குறள்வடிவான திருமால். ஏமுறும்படி - இன்பமடையும்படி.

483 நள்ளழல் - மிக்க அக்கினி. ஈத்திட - ஈந்திட. ஈந்திட என்பது ஈத்திட என்றானது வலித்தல்விகாரம். ஏய்வது - பொருந்துவது.

485 சுருதி - வேதம். மிருதி - ஸ்மிருதி. வரு தியானத்து(டன்) உகும் அவி. உகுதல் - சொரிதல். மாந்திய - உண்ட. பருதி - யாகவேதி.

486 தயா - தயை. எஞ்சலின்று - குறைதலில்லாது. தேம் - தேன். கஞ்சம் - தாமரை. ஈரம் - 1. அன்பு. 2. குளிர்ச்சி. சிந்தைக்கு ஈரம் அன்புடைமை. கைகளுக்கு ஈரம் குளிர்ச்சியுடைமை.

487 நிருமித்த - ஏவிய. ஓமகுண்டத்த - ஓமகுண்டத்தையுடைய. தாமதம் - தாமஸகுணம். ராசதகுணத்து - ராஜஸகுணத்தினையுடைய. பூமகன் - பிரமன்.

488 வேள்விகளோர் நூறு - 477-ஆம் பாட்டிற்கூறிய அக்நிஷ்டோம முதல் மகாகிருது ஈறானவை. உலோபம் - குறை. ஆங்கு - அசை. உலோபம் எவன் எதிர்ப்படும் - உலோபம் எவ்வாறு நேரும்? நேராதென்றபடி. ஏமநாடு - பொன்னாடு - தேவருலகம்.

489 இரணியம், கனகம், இரத்தம், அதிரத்தம், கிருட்டிணம், வெகுரூபம், சுடர் என்னும் ஏழும் அக்கினிதேவனுடைய ஏழுநாக்குகள். தாலு - நா. நயனம் - கண். சிரம் - தலை. சிருங்கி - கொம்பு. சிரமொடு சிருங்கி யிரண்டு நான்கு என்பதனை முறைநிரனிரையாக்கிச் சிரம் இரண்டு சிருங்கி நான்கு எனக்கொள்க. செவி - காது. பதம் - பாதம் - கால். தரணி - பூமி. படிவம் - வடிவம். குருகைநகர்வேதியர், தலையிரண்டும் கொம்பு நான்கும் செவி

ஆறும் நயனம் நான்கும் நா எழும் கை எழும் பாதம் மூன்றும் உள்ள அக்கினிதேவனே அந்தணர்வடிவத்தொடு தோன்றினாற்போல விளங்குமியல்புடையவர் என்றவாறு.

490 நங்கைமார் - பெண்கள். விழுமிது - சிறந்தது. அருந்ததி - நக்ஷத்திரவடிவொடு விளங்கும் வசிட்டன்மனைவி. வடபால் - வடதிசை. சரித்திடுந்தொறும் - நடக்குந்தொறும். கற்பிற்சிறந்த வசிட்டன்மனைவியாகிய அருந்ததியும் உலகத்து மகளிர்கற்புக்குக் குருகைநகர் வேதியர்மனைவியர்கற்பினையே எடுத்துக்காட்டாகக்கொள்வதென்றவாறு.

491 காமாதிமூன்று - காமம் வெகுளி மயக்கம் என்பன. குவலயம் - பூமி. சிற்குணதிகர் - ஆன்மகுணங்களால் மேம்பட்ட பெரியார். இற் செறிதரில் - (தம்) இல்லத்துக்கு எழுந்தருளினால். கொழுநர் - நாயகர். அமிர்து - உணவு. பாலடிசில் - பாற்சோறு. புரப்பார் - கொடுப்பார்.

492 யாணர் - அழகு. நிலம் - பூமி. பொறை - பொறுமை. புனல் - நீர். வாய்மை - சத்தியம். பருதி - சூரியன். மதுரகவிவாணர் - மதுரகவியாழ்வார். குருகைநகரவேதியர், நிலம்போற் பொறையும் நீர்போற் றண்ணளியும் இராமபாணம்போற் றவறாத சத்தியமும் சூரியனைப்போற் றூய்மையும் உடையவர்; மதுரகவியாழ்வாராலும் 'நன்மையால்மிக்க நான்மறையாளர்கள்,' 'மிக்கவேதியர்' என்று புகழ்ந்து பாராட்டப்பெற்றவர் என்றவாறு.

493 களைதல் - போக்குதல். ஐவர் - பஞ்சபாண்டவர். வளை - சங்கம். ஐவருய்ய வளை வாய்வைத்தாய்! நீ எமது துன்பமதைக் களைவாய், (அன்றிக்) களையாதருள்வாய், எமக்கு என்றும் களைகண் நீயன்றி மற்று ஆர்? (ஒருவரும் இல்லையென்றபடி.) எனக் கூட்டுக. கிளை - கூட்டம். நமன் - யமன். தமர் - சுற்றத்தார். கெதி - பற்றுக்கோடு. அளை - தயிர். இது, "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன், வளைவாய் நேமிப்படையாய் குடந்தைக்கிடந்த மாமாயா, தளராவுடல மெனதாவி சரிந்துபோம்போது, இளையாதுனதா ளொருங்கப்பிடித்துப் போத விசைநீயே" என்ற திருவாய்மொழிப்பாசுரத்தை அடியொற்றி யெழுந்தது.

494 வருபிறப்பு - இனி வரும் பிறப்பினை. உருபம் - உருவம். உருவம் ஐந்து - மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. அங்கம் ஆறு - வேதத்துக்கு அங்கமாயுள்ள மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன.

495 இதனால் அந்தணர்க்குரிய அறுதொழிலும் கூறப்படுகின்றன.

497 இதன் முன்னிரண்டடியாலும் அந்தணர்க்குரிய மும்நூலினியல்பு பேசப்படுகிறது. ஆறிரண்டு-பன்னிரண்டு. ஐம்மூன்று-பதினைந்து. ஆறிரண்டும் ஐம்மூன்றும் - (பன்னிரண்டும் பதினைந்தும் ஆகிய) இருபத்தேழு. கூறு - பகுப்பு. முதலில் தனித்தனி மூன்றிழையாய்ப் பின் அம்மூன்றிழையும்சேர்த்து

முறுக்கப்பெற்றுப் புரியாய்ப் பின் அது மூன்றாக மடித்து முறுக்கப்படுதலால் முப்புரியாய்ப் பின் அது மூன்று வடமாக முடியப்படுதலால் முந்நூல் 27 இழையுடையதாயிற்று. இருநான்கு - எட்டு. ஆறு இருநான்கு - ஆறெட்டு - நாற்பத்தெட்டு. சென்ற ஆண்டு ஆறிருநான்கென ஏறின் - கழிந்த ஆண்டுகள் நாற்பத்தெட்டு என்னும் அளவாக நிறைவுறின். நல்லறத்தின்பம் - இல்லறத்தால் அடையும் இன்பம். நாற்பத்தெட்டியாண்டும் பிரமசரியங்காத்து நிறைவேறிற் பின் இல்லறவொழுக்கத்தையும் மேற்கொள்வரென்பது பின்னிரண்டடிப்பொருள்.

498 முனிக்கணம் - இருடியர்கூட்டம். வனம் - வனத்தின்கண். தனித்த - தனிமையான. கோழை - வலியின்மை. செனித்த - தோன்றிய. இல்வில் - இல்லறவாழ்வில் சிவணி - பொருந்தி. துனித்து - வெறுத்து. நல்லறத்துப்புரவுட்கொள்வார் - நல்ல அறநெறியான்வந்த அநுபவங்களையநுபவிப்பர்.

499 போதி - ஞானம்.

500 இதய தாமரை - மனமாகிய தாமரை. மறை - வேதம். தேறல்-தேன். உள் - மனம். புதை - பதிந்த. அவிச்சை - அஞ்ஞானம். இதய தாமரை, மறையாஞ்செழுந்தேறல், ஞானவண்டு, அவிச்சையென்னும் பசி யென்பன உருவகம்.

பின்வரும் இரண்டுபாடல்களாற் சோதிடர்திறம் கூறப்படுகிறது.

502 ஆறிரண்டில் - பன்னிரண்டு (ராசி)களில். ஒன்பதின்நிலை - நவக்கிரகங்கள் நிற்கும்நிலையை. அலகுநூல் - கணிதசாத்திரம். அளைந்து - கலந்து. முகுத்தம் - முகூர்த்தம். நட்டம் முட்டியினொடு சிந்தனை உரைத்தும் குபேரற்கு ஊறுசெய்து அரா ஊர்நிலையுரைத்தும் மழைப்பெயலுரைத்தும் என இயைக்க. நட்டம் உரைத்தலாவது - ஒருபொருளையிழந்தோர் வந்து வினவ அதைப்பற்றிய விவரமெல்லாம் கூறுதல். முட்டியுரைத்தலாவது - கைப்பிடியுள் மறைத்துக்கொண்டபொருளைக் கூறுதல். சிந்தனையுரைத்தலாவது - நினைந்தவற்றைக்கூறுதல். அரா குபேரற்கு ஊறுசெய்து ஊர்நிலை - (அரா - இராகுவென்னும் பாம்பு. குபேரன் - சந்திரன். ஊறு - துன்பம்) பாம்பு சந்திரனை வருத்திச்செல்லும் கிரகணம்.

503 போது - பூ. போது இடத் தனிவரம் தரும் முகுந்தன் என்க. முகுந்தன் - திருமால். புரந்த - கொடுத்த - பெற்ற. மா திடத்தன் - பெரிய வலியுடையான் - பிரமன். மாது இடத்தன் - பெண்ணை (உமாதேவியை) இடப்பாகத்திலுடைய சிவபெருமான். மெய்த்திட - பாராட்ட. பிரமதேவனும் சிவபெருமானும் பாராட்டுமாறு என்றபடி. கோள் - கிரகம். சுரா சுரர்குரவர் - வியாழ வெள்ளிகள்.

504–505 இவ்விரண்டுசெய்யுளும் ஆயுள்வேதியரியலுரைப்பன. அன்றைக்காரணத்தெய்தியது - பழவினையான் வந்த நோய். அன்று ஈண்டு முற்பிறப்பு என்னும் பொருளது. அகலும்நாள் அகலும் - (அப்பழவினை) நீங்கும்நாள் நீங்கும். அன்றைக்காரணத்தெய்தியது, என்றைக்காகிலும் (அன்றைக்காரணம்) அகலும்நாள் அகலும் என இயைக்க. தவிர்ந்து - நீங்கி. இருந்திறத்து இடர்செய் ஒன்றை - மிக்க வலியுடன் துன்பத்தைவிளைக்கும் காரணங்களாலுண்டான நோயை. குன்றலின் மிகுதலின் - உணவும் செயல்களும் (ஒருவன்பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனிற்) குறைதலாலும் மிகுதலாலும் [உணவொத்தலாவது - சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது - மன மொழி மெய்களாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்குமுன்னே ஒழிதல்]. உற்றதென்று - வந்ததென்று. உணர்ந்தபின்றை - உணர்ந்தபின். காது - வருத்துகின்ற. பிணியுளான்பருவமும் பிறவும் - நோய்கொண்டோனுடைய பருவமும் பகுதி வேதனை வலிகளும், சாத்தியம் அசாத்தியம் யாப்பியமென்னும் பிணிவேறுபாடும், தொடக்கம் நடு ஈறென்னும் அதன் பருவவேறுபாடும், வன்மை மென்மைகளும் முதலாயின. உடக்கிய - செலுத்திய. செவ்வி - காலம். மருந்தையந்நோய்க்கு என்றுள்ள பாடம் மருந்தையும் நோக்கி என்றிருப்பிற் பொருட்பொருத்தமுடையதாகும். ஆயுள்வேதியர் - மருத்துவர். கடவுளர் மருத்துவர் - தேவவைத்தியரான அசுவினிதேவர்கள். பழவினையானும், உணவுஞ் செயல்களும் ஒவ்வாமையாகிய காரணங்களானும் மக்கட்குண்டாகும் வாத முதலிய பிணிகளுள், பழவினையான்வருவன அதன் கழிவின்கணல்லது தீராமையின் அவற்றை யொழித்துக் காரணங்களாலுண்டாய் வருத்தும் நோய்களை இதனாலுண்டாயதென்றறிந்து பின் நோயுற்றான் பகுதி பருவம் வலி வேதனைகளினளவும் பிணிவேறுபாடும் அதன் வன்மை மென்மைகளும் காலமும் அது தீர்த்தற்குரிய மருந்தும் ஆதியவற்றை நன்குசிந்தித்து, நோயாளியினிடத்து அன்புடைமையால் தாய்போலவும் நோயாளி குறிக்கொண்டொழுகவேண்டுமுறைகளிற் றவறாதொழுகுவித்தலால் தந்தைபோலவும் இருந்து இனியவுரையோடு மருந்தூட்டி, அவன் நோயினைநீக்கும் குருகைநகர மருத்துவர் தேவவயித்தியரான அசுவினிதேவர்போற் சிறந்தவரென்றவாறு. இவ் விரண்டுபாடலுள்ளும், 'மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்—வளிமுதலா எண்ணிய மூன்று', 'நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்—வாய்நாடி வாய்ப்பச் செயல்', 'உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்—கற்றான் கருதிச் செயல்' என்னுங் குறட்கருத்தமைந்துள்ளமை நோக்கியறியத்தகும்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை...	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	குடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	சந்திரகுப்தன்	0	6	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.